மணிமேகலைப் பிரசுரம்

# அந்தரிக்கும் ஆன்மா

(கவிதைகள்)

அன்ரன் செல்வக்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தரிக்கும் ஆன்மா

(கவிதைத் தொகுதி)

## அன்ரன் செல்வக்குமார்

**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண் : 1447

7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,

தியாகராய நகர், சென்னை - 600 017.

தொலைபேசி : 24342926

தொலைநகல் : 0091-44-24346082

மின் அஞ்சல் : manimekalai@eth.net

இணைய தளம் : www.manimekalaiprasuram.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | ☞ | **அந்தரிக்கும் ஆன்மா** |
| ஆசிரியர் | ☞ | அன்ரன் செல்வக்குமார் |
| மொழி | ☞ | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ☞ | 2004 |
| பதிப்பு விவரம் | ☞ | முதல் பதிப்பு |
| உரிமை | ☞ | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ☞ | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | ☞ | கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ☞ | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ☞ | 112 |
| அட்டைப்பட ஓவியம் | ☞ | சாய் |
| லேசர் வடிவமைப்பு | ☞ | கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ் சென்னை - 26. |
| அச்சிட்டோர் | ☞ | ஸ்கிரிப்ட் ஆஃப்செட் சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | ☞ | தையல் |
| வெளியிட்டோர் | ☞ | **மணிமேகலைப் பிரசுரம்** சென்னை - 17. |


நூலின் விலை

**ரூ. 30.00**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

என்னைப் பெற்றெடுத்து
தொட்டிலிட்டு
சீராட்டித் தாலாட்டி
நிலாக்காட்டி சோறூட்டி
தாய்ப்பாலுடன்
தமிழ்ப்பாலையும்
ஊட்டிவளர்த்து
என்னை ஆளாக்கிவிட்ட
என் அன்புத்தாயார்
அமரர் திருமதி மேரிமெக்டலீன்
தேவசகாயம்பிள்ளை
(குமாரத்தி)
அவர்களுக்கு
இச்சிறுகதை கவிதைத் தொகுப்பை
சமர்ப்பணம் செய்வதில்
பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

*- அன்ரன் செல்வக்குமார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


1. பூக்கள் .......... 21
2. பனை .......... 22
3. நட்பு .......... 24
4. இரவு .......... 26
5. தொலைந்த இரவு .......... 28
6. உனது நலம் எப்படி? .......... 30
7. அது ஏன்? .......... 32
8. விடியல் பொழுது! .......... 33
9. இன்றைய நிலை! .......... 36
10. எரியும் அகதிகள்! .......... 37
11. காதல் + வீரம்! .......... 39
12. செருப்பு! .......... 41
13. அழகி! .......... 43
14. நினைவை மீட்டிப்பார்! .......... 45
15. விடிவு விலகிச் செல்கிறது! .......... 46
16. பொருளாதாரத்தை மேம்படுத்த .......... 47
17. மரணம் வாழ்வின் முடிவல்ல! .......... 48
18. விலைவாசி! .......... 51
19. அந்தரிக்கும் ஆன்மா! .......... 53
20. உதயத்தில் ஓர் அஸ்தமனம்! .......... 59
21. தாண்டிக்குளத்து அறிவிலிகள்! .......... 61
22. முதல் கவிதை! .......... 63
23. ஒரு கவிஞனின் காதல் இலக்கியம் .......... 64
24. இனியவள்... .......... 65
25. எங்கே? எங்கே? எங்கே? .......... 66


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. இளைஞர் ஆண்டு! ........ 67
27. தியாகச் சின்னங்கள்! ........ 69
28. சர்வதேச வீடமைப்பு ஆண்டு! ........ 70
29. கண்ணீர்! ........ 71
30. இலட்சியம்! ........ 72
31. மீண்டும் வராதோ...? ........ 73
32. குமைச்சல்கள்! ........ 77
33. புரட்சிப் பூக்கள்! ........ 78
33. மண்ணுக்காக........ 80
34. கவுஸ்மேட் (தேடல்) ........ 81
35. தலைவிதி! ........ 82
36. தேவதை கண்ணீர் வடிக்கிறாள் ........ 83
37. தாய் (மம்மி) ........ 84
38. நீ வேண்டும்! ........ 85
39. இரும்பு நெஞ்சா? ........ 86
40. எப்போது விடியும்? ........ 87
41. ரம்ஜான் பெருநாள்! ........ 89
42. நாங்கள் யார்? ........ 90
43. கொடிய யுத்தம்! ........ 92
44. ஞானம் ........ 94
45. மனித அரக்கர்கள்! ........ 95
46. இராமர் கோயில்! ........ 97
47. புரிந்துணர்வு உடன்படிக்கை! ........ 98
48. அரபு நாட்டு ஆசைகள்! ........ 100
49. கடலுடன் கலந்த கடற்புலிகள்! ........ 103
50. தோழிக்கு ஒரு கடிதம்! ........ 106
51. சமாதானப் பூ மலரட்டும் ........ 109
52. நன்றி! ........ 111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொல்லின் செல்வன் – செந்தமிழ்த்தென்றல்

## புலவர்மணி இளவாலை அமுது

## அவர்களின் பார்வையில்

# மதிப்புரை!

பொங்கி வரும் பால்போல
பூத்து நிற்கும் நெற்கதிர்கள்
திங்கள் வந்துபார்த்தவுடன்
சிரித்துத் தலையாட்டி நிற்கும்!

வடமாகாணத்தின் வளமான பிரதேசம்
முக்கனித்தோப்புகள்
கட்டியம் கூறிநிற்கும்
இளவாலை என்னும் கிராமம்
செல்வக்குமார் என்னும்
சேயன் பிறந்த இடம்!

சரித்திரத்தில் இடம் பிடித்துக்கொண்ட
கிளாலிக்கடல் ஏரியைத்தாண்டி
செல்வக்குமாரின் ஆன்மா...
கவிஞன் பிறந்த இடமான
பத்தாவத்தை நோக்கிப் பயணிக்கிறது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்கும் நிலம் புகுந்து
கொடிகாமம் சென்றங்கு
குற்றுயிரில் மண்கவ்வும் நிலை பார்த்து
சாவகச் சேரியின்று
சரித்திரத்தில் ஹிரோசிமா!

பூவிழந்து பொட்டழிந்து
போன பெண்ணைக்
கண்டு கொண்டு
ஓ..... என்று கதறியழ
உடலத்தைத் துண்டாக்கி
கூவி அழுதவரைக்
கொன்று குவித்த இடம்!

நாவற் குழியும் தாண்டி
கற்பைப் பறித்தெடுத்து
கன்னியரை மண் கிடங்கில்
ஏற்றி எறிந்த இடம்!

இளைஞர் சிறைச்சாலை
சுற்றிவளைத்துச் சுடுகாடு கொண்டுவந்து
உற்றார் கதறியழ
உயிரோடு தாட்ட இடம்!

கண்ணீர் பெருக்கி விட்டுக்
கரத்தைக் குவித்தபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணிலே செம்மணியை
மனாங்கசிந்தே முத்தமிட்டேன்...
முன்னர் கவிஞர் சந்தோஷமாக வாழ்ந்த
'லூர்துபுஸ்பவாசா' இல்லத்தில்...
தேடிவைத்த ஜன்னல்களும்
தேக்கமரக் கதவுகளும் கழற்றப்பட்டு
சுற்றியுள்ள மதிலும் உடைந்து
பாழடைந்து போயிருந்த
பழைய வீட்டுக் கூரை முகடுகளில்
அடைக்கலங் குருவியின்
குடும்பங்கள் பல!
அஞ்சாத நெஞ்சுடனே
அடையாள அட்டையின்றி
முட்டையிட்டுக் குஞ்சு பொரித்துக்
குடியிருக்கக் கண்டேனடி....
இப்படியாக ஐம்பத்தி யிரண்டு
கவிதைகளை என்றன் ஊர்
அன்ரன் செல்வக்குமார் என்ற
இனிய கவிஞன் பொரித்து
வைத்துள்ளார்!
அத்தனையும்
படிக்கப் படிக்கத் திகட்டாமல்
தித்திக்கும் – கவிதைகளைத்
தமிழ்த்தேனைச் சாறுபிழிந்து
தரமாகத் தந்துள்ளார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேங்காய் விழுந்தவுடன்
மாங்காய் சிதறுகின்ற
இளவாலைக் கிராமத்தின்
பத்தாவத்தை கவிஞனின் சொந்த இடம்
அரைக்கால் சட்டையுடன்
துள்ளித்திரியும் சிறுவனாக
துடிப்புமிக்க இளைஞனாக
எனது பிள்ளைகளின் – வசந்தனின்
இனிய நண்பனாக – இளவாலை
புனித . ஹென்றியரசர் கல்லூரியின்
சிறந்த உதை பந்தாட்ட ஹொக்கி வீரனாக
கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே
சிறுகதை எழுத்தாளனாக
கவிதை புனைபவனாக
நாடக நடிகனாக
கவியரங்கம், பட்டிமன்றப் பேச்சாளனாக....
இப்படி; அன்ரன் செல்வக்குமாரின்
ஒவ்வோர் அசைவையும்
பக்கத்திலிருந்தே பார்த்திருந்தவன் நான்!
1984–ல் இலங்கை தொழில் நுட்பக்
கல்லூரியில் –
'கோடுகளும் கோலங்களும்' தந்த
தரமான கவிஞனாகத் தன்னை
இனம் காட்டிக் கொண்டவன்
பின்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1987ல்
'வானத்துப் பெண் ஏன் கண்ணீர்
வடிக்கிறாள்' என்னும்
புதுக்கவிதைத் தொகுப்பை வெளியீட்டி
இளவாலை இளங்கதிர் மன்றம்
பெருமைப் படவைத்தவன்!
இவரது கவிதைகள்
களம், களத்தில், முல்லை, எரிமலை, வீரகேசரி
ஈழநாடு, இடி, தினகரன், ஈழமுரசு,
தொடுவானம், தென்றல், கீதவாணி, ஞாயிறு
IBC, T.R.T. வானொலி
உதயன், ஈழநாடு, தமிழர் செந்தாமரை
என விரிவடைந்தது...
நானூறுக்கும் மேற்பட்ட
தரமான உணர்ச்சிக் கவிதைகளை
இலக்கிய உலகிற்குத் தந்த கவிஞன்!
2000ம் ஆண்டு ஆனி 25ல்
'சமுதாயத் தோப்பில் சாய்ந்த தென்னைகள்'
என்னும் சிறுகதைத் தொகுதியை
புத்தளம் 'சிந்தியா கலை இலக்கியவட்டம்'
ஊடாக வெளியீட்டி
பேராசிரியர் சி. தில்லைநாதன்,
பேராசிரியர் சோ. சந்திரசேகரன்,
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
ஆகியோரின் வாயால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிறந்த சிறுகதை எழுத்தாளன்'
என்று பாராட்டப்பட்டு
பொன்னாடை போர்த்தி
புத்தளம் I.B.M. மண்டபத்தில்
கௌரவிக்கப்பட்டவன்!
கவிஞனின்
'அந்தரிக்கும் ஆன்மா......'
இன்னொரு மைல்கல்,
காட்டருவியான தமிழ்நடை,
கூர்மையான பார்வை,
குத்தலான நகைச்சுவை,
நஞ்சென்ற தண்டிப்பு,
போரின் அவலங்களை
படம் பிடித்துக் காட்டும் தன்மை.....
நமது தோளை அழகாகப்பிடித்து
அவர் எங்கெங்கெல்லாம் போகவேண்டும்
என மனம் விரும்புகின்றாரோ
அங்கெல்லாம் நம்மை
அமைதியாக அழைத்துச் சென்று
தமது உணர்ச்சிகளை எமக்கும்
பரிமாற்றம் செய்கின்றார்....
இவரின் கவிதைகள் பல இடங்களில்
கனல் கக்குகின்றன!
புலியின் உறுமல்....
நஞ்சென்ற தண்டிப்பு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த உதை பந்தாட்ட வீரன்
என்பதனால் போலும்
கவிதைகளிலும் ஒரு வேகம்...
கவிஞனின் பார்வை இன்னும்
சமூகம் நோக்கிய பார்வையாகவும்
எழுதுகோலை எப்போதும் ஈரப்படுத்தவும்
வேண்டி
எனது பாராட்டுகளையும் சொல்லி
'மடுமாதா' நல்ல நீண்ட ஆயுளை
அன்ரன் செல்வக்குமாருக்கு கொடுத்தருளப்
பிரார்த்திக்கின்றேன்.

என்றும் அன்புடன்,

**இளவாலை அமுது**

Poet. S. Adaikalamuthu
No. 87 Hazelmere Walk
Northolt Middle Sex
UB5 6UR U.K.
Tel 0181 845 0887

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய இலக்கிய நண்பர்களுக்கு என் இனிய வணக்கங்கள் பல!

நின்று நிதானித்து நிமிர்ந்து பார்க்கின்றேன். எழுத்துலகில் காலடி எடுத்துவைத்து இருபத்தி ஒன்பது வருடங்கள் பூர்த்தியடைந்துவிட்டன. 'எழுத்தாளன் சுதந்திரமானவன். அவன் எண்ணங்கள் சுதந்திரமானவை. அவனை ஒரு வட்டத்துக்குள் அடக்கிவிட முடியாது' என்ற கொள்கையின் அடிப்படையில் எழுதுகோலைத் தூக்கிய என் கரங்கள் அதன் நிலையில் நின்று இன்னமும் தளர்ந்து விடவில்லை.

எனது கவிதைகள் சமுகத்தில் புரையோடிப்போயுள்ள போலிகளையும், பொய்மைகளையும், பம்மாத்துகளையும், இறுமாப்புகளையும்      களையும் நோக்கமாகப் படைக்கப்படுவதனால் அதைப்பற்றி நேரிடையாகவும், மறைமுகமாகவும் வாழ்த்துத் தெரிவித்து புகழ்பாடியவர்கள் சிலர். கண்டனங்கள் தெரிவித்து வசைபாடியவர்கள் பலர். ஆனால் யாவற்றையும் நான் ஒரு (Sportive) 'ஸ்போட்டிவ்' ஆக எடுத்துக்கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கவிஞனின் கருத்துகள் சரியானவையா? பிழையானவையா என்பது ஆய்வுக்குரியது. சிலருக்குச் சரி எனப்படுவது பலருக்குப் பிழையாகவும் தோன்றும். இம்முரண்பாடு இயற்கையே. ஏனெனில் முரண்பாடென்பது இயற்கையாக விளையும் பிரச்சினையுமாகும். இத்தகைய முரண்பாடு முதிர்ச்சியடைகின்றபோது விளைவு அடிப்படையிலான தீர்வு உண்டாகின்றது. கூட்டலும் கழித்தலும் இயற்கை முரண்பாடு. பெருக்கலும் பிரித்தலும் இன்னொரு முரண்பாடு. சூரியனும் சந்திரனும் வேறொரு முரண்பாடு. நேர் மின்சாரமும் எதிர்மின்சாரமும் இன்னுமோர் முரண்பாடு. ஆணும் பெண்ணும், முதலாளித்துவமும் தொழிலாளித்துவமும் முரண்பாட்டு நிலைக்கு இன்னுமோர் எடுத்துக்காட்டுகளாகும். இம்முரண்பாட்டு நிலைகளின் நிலை முதிர்வு அடைகின்றபோது ஏற்படுகின்ற தீர்வுகளே கணிதமாயும், கிரகணமாயும், ஒளியாயும், மனிதப் பிறப்பாயும், புரட்சியாயும் முறையே விளைகின்றன.

இவ்வாறே ஒரு கவிஞனின் கருத்துகள் சரியானவையா? பிழையானவையா என்பது பற்றிச் சமூகத்திலுள்ளவர்கள் சிந்திக்கும்போது ஏற்படும் முரண்பாட்டினால் பிறக்கின்ற விளைவு சிந்தனை வளர்ச்சியாம். ஆகவே மனித சிந்தனை வளர்ச்சிக்கு ஆக்கப் பூர்வமாகப் பணிபுரிகின்றவன் ஒரு கவிஞன்.

கவிஞன் ஒருவன் தன் அபிப்பிராயத்தையே வெளியிடுகிறான். ஆனால் அக்கருத்துகளை யாரும் ஏற்கவேண்டுமென்று அவன் வற்புறுத்துவதில்லை. அந்த அதிகாரமும் அவனுக்கில்லை. ஆனால் கவிஞனின் அபிப்பிராயத்தை ஏற்பதும் மறுப்பதும் சமுதாயத்திற்கு சம்பிரதாய ரீதியில் சொந்தம்; சட்டப்படியன்று. மொத்தத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கவிதைகள் சமூகத்தில் பல தாக்கங்களை ஏற்படுத்தியிருக்குமென்பது வெள்ளிடைமலை.

மேலும் எழுத்துலகில் இடம் பிடிக்க நான் நடந்து வந்த பாதைகளையும் மேடுகளையும் பள்ளங்களையும், வளைவுகளையும், சுளிவுகளையும் எண்ணிப் பார்க்கின்றேன். யாழ் இளவாலை புனித. ஹென்றியரசர் கல்லூரியின் இதமான மாமரக்காற்றும் பலாப்பழத்தின் இனிய மணமும் நான் கற்ற கல்விபோல் சுகமாக, இதமாக நின்று இன்றும் என் அடி மனதில் இனிக்கின்றது.

புனித. ஹென்றியரசர் கல்லூரியில் படிக்கும்போதே எனக்குத் தெரியாமலேயே என்னுள்ளே முகை வெடித்து வளர்ந்த இலக்கிய ஆர்வத்தை, எழுத்தாற்றலை, கலையுணர்வை வெளிக்கொணர, அதற்கு உரம் இட்டு நீர் பாய்ச்சிய ஆசிரியத் திலகங்கள் இருவர். எனது தமிழ்ப் பாட ஆசிரியர் மறைந்த வித்துவான் அ. சந்தியாப்பிள்ளை அவர்கள் எனது இலக்கிய எழுத்தாற்றலுக்கு உரமிட்டார் என்றால் ஆசிரியர் திரு.பி.ஏ.சி. ஆனந்தராஜா அவர்கள் என் கலை வளர்ச்சிக்கு நீர் பாய்ச்சியவர். புனித. ஹென்றியரசர் கல்லூரியின் 'கவின் கலை மன்றம்' எனது எழுத்தாற்றலுக்கு அடித்தளமிட்டது என்று கூறினால் அது மிகையாகாது.

இன்றைய இளைய தலைமுறையின் நல்ல இலக்கியவாதியும் 'அர்த்தங்கள் ஆயிரம்' என்ற சந்திப்பு இலக்கியத்தின் மூலம் இலக்கிய உலகையே பரபரப்புக்குள்ளாக்கியவரும், ஈழநாடு, ஈழமுரசு, லண்டன் முரசு ஆகியவற்றில் உதவியாசிரியராகக் கடமையாற்றி தற்போது கனடாவில் வசிப்பவரான திரு. எஸ். ஜெகதீசன் அவர்கள் நான் கல்லூரி மாணவனாக இருந்து எழுதத்தொடங்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் இருந்தே எனது கையெழுத்துப் பிரதி ஏடுகளான 'கலையரசி', 'கரும்பு' ஆகியவற்றைப் படித்துவிட்டு என்னைத் தட்டிக்கொடுத்து ஊக்குவித்தவர்.

யாழ் இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் 1980, 1981, 1982 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த 'தொழில் நுட்ப இளைஞன்' ஆண்டுமலர் எழுத்தாளர் - ஆசிரியர் குழுவில் நானும் ஒருவனாக இருந்ததை பெருமையுடன் எண்ணிப் பார்க்கின்றேன். மேலும் எனது கவிதைகளை, சிறுகதைகளை வெளியிடுவதற்கு களம் அமைத்துத்தந்த செவ்வந்தி, களம், முல்லை, அமுது, தொழில்நுட்ப இளைஞன், லண்டன் முரசு, கோழிக்குஞ்சு, கீதவாணி ஆகிய சஞ்சிகைகளும் ஈழநாடு வாரமலர், ஈழமுரசு, தினக்குரல், வீரகேசரி வாரவெளியீடு, தினகரன் வாரமலர், சிந்தாமணி, சுடர்ஒளி, இடி, கனடா ஈழமுரசு, கனடா உதயன், கனடா தமிழர் செந்தாமரை ஆகிய பத்திரிகைகளும் என் எழுத்துலக வாழ்க்கையில் மறக்கப்பட முடியாதவை. இக்கவிதைத் தொகுதியில் உள்ள கவிதைகளில் பல ஏற்கனவே பத்திரிகைகளில் வெளிவந்தவை என்பதும் 1998 ஜூன் 25இல் (Internet) இணையதளத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கது.

நான் யாழ் - இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி மாணவனாக இருந்தபோது எனது 'கோடுகளும் கோலங்களும்' புதுக்கவிதைத் தொகுதியை வெளியீட்டி வைத்த தொழில் நுட்பக் கல்லூரி மாணவ மன்றத்தினர் என்றும் என் நன்றிக்குரியவர்கள்.

மற்றும் 'வானத்துப் பெண் ஏன் கண்ணீர் வடிக்கிறாள்' என்ற புதுக்கவிதைத் தொகுதியை வெளியீட்டிவைத்த தாமரைச் செல்வி பதிப்பகத்திற்கும் எனது நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25.06.2000-ல் ‘சமுதாயத்தோப்பில் சாய்ந்த தென்னைகள்’ என்ற எனது சிறுகதைத் தொகுதியை ‘புத்தளம் ‘சிந்திய கலை இலக்கிய வட்டம்’ மூலம் வெளியீட்டி வைத்த சிந்தியா வெளியீட்டுக் குழுவினருக்கும் அங்கத்தவர்களுக்கும் என் நன்றிகள்.

‘அந்தரிக்கும் ஆன்மா’ கவிதைத் தொகுதியை 1998 ஜூன் 25இல் இணைதளத்தில் அறிமுகப்படுத்தி உலகளாவிய ரீதியில் இலக்கிய உலகில் என்னைப் பலருக்கும் அறியச் செய்த எனது அன்பு மருமகன் திரு. V.R. ஜார்ஜ் (சிஸ்டம் இன்ஜினியர் - கனடா) அவர்களுக்கு என் இதயபூர்வமான நன்றிகள்.

மேலும் இக்கவிதைத் தொகுப்பிற்கு மதிப்புரை எழுதிய சொல்லின் செல்வன், செந்தமிழ்த்தென்றல், மதுரகவி - கவிஞர் - இளவாலை அமுது இலக்கிய உலகில் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக உலகறியப்பட்டவர். நாட்டுப் பிரச்சினை காரணமாக சொந்த இடமான இளவாலையிலிருந்து புலம் பெயர்ந்து தன் பிள்ளைகளுடன் லண்டனில் வசிக்கின்றார். இலக்கியம் என்ற பாசக் கயிற்றால் என்னுடன் முப்பது வருடங்களுக்கும் மேலாக இறுக்கமான தொடர்புடையவர். அவரின் மதிப்புரையை எனது எழுத்துலக வாழ்க்கையில் பெரிய பொக்கிஷமாகக் கருதுகின்றேன். அண்மையில் சொந்த இடமான இளவாலையில் ‘மதுரகவி’ பட்டம் கொடுத்துக் கௌரவிக்கப்பட்டார். ‘ஒரு கலைஞன் வாழும் காலத்திலேயே கௌரவிக்கப்பட வேண்டும்’ என்ற கொள்கை உடைய ‘இளவாலை இலக்கிய வட்டம்’ பாராட்டுக்குரியதே.

எனது கிறுக்கல் எழுத்துகளையெல்லாம் அவ்வப்போது தனது அழகான கை எழுத்தில் எழுதித்தரும் என் அன்பு மனைவி திருமதி. சிந்தியா ரஜனி அன்ரன் அவர்களுக்கும் என் அளப்பரிய நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இலக்கியப் புத்தகங்கள் காலம் என்னும் கரையில் கட்டப்பட்டுள்ள கலங்கரை விளக்குகள்' என்றான் 'விம்பிள்' என்னும் ஓர் ஆங்கில அறிஞன். எனது 'அந்தரிக்கும் ஆன்மா' காலம் எனும் கரையில் நிறுத்தப்பட்ட கலங்கரை விளக்காக இல்லாதுவிடினும் ஒளி நல்கும் கனலாய் நின்று சமுதாயத்திற்கு வழிகாட்டும் என்று திடமாகக் கூறிக்கொண்டு அன்புடன் விடைபெறுகின்றேன்.

மீண்டும் சந்திப்போம்!

அன்புடன்
**அன்ரன் செல்வக்குமார்**

T. Anton (Selvakumar)

Resi. 22/17, Lane No. 1
Sara Textile Road,
Puttalam,
Srilanka.
Tel No. 09432-2265810

Offi. Anton Therasagayam Pillai
Central Control Room
Qater National Cement Company,
P.O. Box # 1333
Doha - Qatar
Tel : 0944712583
E-mail : antonk2004@yahoo.com
WebSite : www.angelfire.com/ut/anton

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் கடிதம்



நினைவுப்பாதை
நீண்டு வளைந்து போகிறது
நண்பா!
இளவாலை நண்பர்களுடன்
இறுக்கமாகப் பிணைக்கப்பட்ட உந்தன் தொடர்பை
இதயம் எண்ணிப் பார்க்கின்றது எங்கள்
இதயம் உந்தன் கொடும் மரணத்தை ஏற்க மறுக்கின்றது.

பதினைந்து வருடங்களுக்கு மேலாக
பழகி வந்த உந்தன் நட்பை
பாழும் மனதினில்
பாவிகள் நாம் நினைத்துப் பார்க்கின்றோம்

கல்லூரியில் கலைவிழாக்கள் என்றாலென்ன
கல்லூரி உதைபந்தாட்ட மெய்வல்லுனர் போட்டியென்றாலென்ன
பாலுக்குட்டி நின்றால்தான் அங்கு
பரிமளிப்பு என்று பலரும் சொல்லுவார்

நண்பா!

கடந்த ஆண்டின் பங்குனிமாத முற்பகுதியில்
கல்லூரி இல்ல மெய்வல்லுனர் போட்டி முடிவுற்ற பிற்பாடு
கல்லூரி மைதானத்தில் நீ ஓதிய கல்லூரிக்கீதம்
காலமெல்லாம் எம் இதயங்களில் ஒலித்துக்கொண்டேயிருக்கும்

நண்பா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய பொழுது நீ பட்ட பாட்டை உந்தன்
அம்மா ஒப்பாரியாக எங்களுக்கு எடுத்துச் சொல்கிறாள்
உறுமியபடி ஜீப்பும் ....... கவச வாகனங்களும்......
எதிர் வீட்டுத் தகரப்படலையில் தடதடப்பாம்
உன்வீட்டில் நீ படபடப்பாம்

நாய் குரைக்க குரைக்க ... திரும்பிப்
பார்க்க முடியாமல் சேட்டை மாட்டிக்கொண்டு
கால்போன போக்கினிலே
கத்திவெட்டான் வரையும் தனித்து ஓடினாயாமே!

நண்பா!

கத்திவெட்டான் இல் -- நீ
கதிகலங்கி யார் துணையுமற்று சூடுபட்டு மாள்வதற்காகவா
உன்னை
ஞானமலர் பண்டத்தரிப்பில் பெற்றெடுத்து தொட்டிலிட்டு
நிலாக்காட்டிச் சோறும் ஊட்டினாள்?

நண்பா!

அன்றைய தினம் நீ பட்ட கஷ்டத்தை நினைக்கையில்
உடம்பு சிலிர்க்கின்றது;
இதயம் துடிக்கின்றது;
மனசு...?
பாதி இருட்டினில்
பால் நினைவுச் சுடராய் நீ!
பாழும் மனதினில் என்றும் நீ!
பாவிகள் எம்மால் மறக்கவே முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்திக்கும் ஆன்மா

## பூக்கள்!

வானத்தின் சோலைதனில் மலர்கள் பூக்கும்
வாடாத செம்மலர்கள் ஓடித்திரியும்
கானகத்தில் எண்ணரிய பூக்கள் தோன்றும்
காட்சிதனை அனுபவிப்பர் மிகச் சொற்பம்!

பூ முகத்துச் சோலைகளில் பூத்துப் பூத்துப்
புன்னகை செய்யும் முகங்கள் சில
தாமரையும் அல்லிகளும் நீரில் வந்து
தம் இனிய முகத்தைக் காட்டும்!

உச்சி மலையிற் குறிஞ்சிப் பூ உருவாகட்டும்
உவர்கடலின் கரைகளிலே செம்மண் பூ உருகாட்டும்
வயலருகே செங்கழுநீர் வரிசை காண்போம்
வரம்பளிக்கும் கணப்பொழுதில் வாடிச்சோரும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை!

நீ
ஈழத்திருநாட்டின்
கற்பகத் தரு!
எம்முன்னோர்கள் உன்னைப்
பொன்னெனப் போற்றினர்
கற்பகத் தரு என பொற்பெயர்
சூட்டி மகிழ்ந்தனர்!

உன்னை
பண்ணையில் நட்டுப் பயிராக்கவில்லை
தண்ணீர் ஊற்றி வளர்க்கவும் இல்லை
தாயில்லாப் பிள்ளைபோல் தனியே
நீ வளர்ந்து வந்தாய்
எங்களுக்கு
உண்ண உணவாய்
உறங்க வீடாய்
படுத்திடப் பாயாய்
எடுக்கப் பெட்டியாய்
இனிய கருப் பன்னீராய்
இனிய பனாங்கட்டியாய்
குடிக்க மதுவாய்
எரித்திட விறகாய்
உன் பயன்களைப்
பட்டியல் போட்டால்
அனுமன் வால் போல
அது நீண்டு போகுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழகக் காற்று
உன் தலையைச் சுற்றியது
சூறாவளி உன்னை ஆட்டி அலைத்தது
இடியும் மின்னலும் உன்னை முட்டி மோதின
அச்சம் அறியாத ஆண்மகன் நீ - உன்
நிமிர்ந்த போக்கும் நெஞ்சின் உறுதியும்
எதிர்த்தவரையே ஏளனம் செய்தன!
முப்படைகளுக்கும் உன்றன்
நெஞ்சுறுதியைக் காட்டிய
நினைவுச் சின்னம் நீ!
ஈழத்திரு நாட்டின்
'மாவீரன்' நீ!
கம்பன் உன்னைக் கண்டிருந்தால்
உன் பெயரில்
கவிகள் பல பாடியிருப்பான்!
இலங்கையைக் கலக்கிய
வானரப்படைகள்
வாளேந்தி நின்ற உன்னைக் கண்டதனால் போலும்
வடக்கின் பக்கமே தலைகாட்டவில்லை!
வள்ளல்களின் வாரிசு நீ!
பசி பட்டினியிலும் தஞ்சம் அளிக்கும்
கொடை வள்ளல் நீ!
A-9 பாதையை குறியீட்டினில் காட்டும்
உயர் குடிமகன் நீ!
நீ இருக்கின்ற துணிவில்தான்
'கவர்' எடுத்து நாம்
இன்னும் வாழ்கின்றோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு!

நண்பா!
நட்பின் புகழ்பாடும்
ஒரு
அன்பு நண்பனின்
புதுவருடக் கவிதையிது!
தேங்காய் விழுந்தவுடன்
மாங்காய் சிதறுகின்ற
கிராமத்துக்குயிலின்
புதுவருடக் கவிதை இது!
கடந்த காலங்கள்
இளவாலைக் கிராமத்தில்
மூலை முடுக்கெல்லாம்
துவிச்சக்கர வண்டியில்
சுற்றிய நினைவுகளோடு....
சேந்தாங்குளக் கடற்கரை மண்ணில்
கைகோர்த்துத் திரிந்த
ஞாபகங்களோடு....
சித்திரை மாதத்து
வெயிலையும் பொருட்படுத்தாமல்
சித்திரமொழி வயல்வெளியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பட்டம்' பறக்கவிட்ட
இனிய நினைவுத் துளிகளினூடு
கீரிமலைக் கேணியில் 'பென்ரரோடு'
நீந்தி விளையாடிய
அன்றையநாள் ஞாபகங்களோடு......
நிகழ்காலமோ....?
தொலைதூரமாய் - இப்போ
தொலைபேசி அழைப்புகளோடு
என்னதான் நடந்தாலும்
காலங்கள் கழிந்தாலும்
எத்தனை யுகங்கள் அழிந்தாலும்
நட்புமட்டும் - இன்றும்
இளமையாய் இதயங்களில்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவு!

இரவு முட்களின்
தனிமைக் கீறல்கள்
சோகக்குருதியைச்
சொட்டும்!

\+ + +

ஏக்க உணர்வுகள்
தாக்க மனஓடம்
ஓர் ஓட்டையாகும்
நேந்திரப் பாத்திரம்
ராத்திரி நேரத்தில்
கண்ணீரைச் சொட்டும்!

\+ + +

நெஞ்சக் குழந்தை
அன்புப்பால் கேட்டு
இதயத்தை உரசும்!

\+ + +

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சிக்கிளி
உடல் கூட்டை
உடைத்து
வெளியே வர எத்தனிக்கும்!

+ + +

தனிமை பாசம்
இதயத்தை அழுத்த
இருவிழியும்
கண்ணீர்ப் பூக்களைச்
சுமக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைந்த இரவு!

விடியலில்
வீட்டுக்குவந்த
வெளிச்சம்
இருளின் கருப்பையை
அள்ளி வெளியே
வீசியது!
வெளியே சென்ற
இருள் வெளிச்சத்திற்குள்
தொலைந்து போனது!
இரவில்
படுக்கைக்குவந்த கனவு
சுகமான நினைவுகளைத்
தந்துவிட்டு
இரவைத் தேடி
எங்கேயோ சென்றது!
படுத்தபாய் நான்
எழும்பியபோது
சுருண்டு கொண்டது - பகலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு வேலையில்லாததால்
சாளரத்துச் சந்துகளில்
எட்டிப் பார்த்த
பனிகளை எட்டிப்பிடித்தேன்!
வலியால்
பனிகள் அழுதன!
என்கையெல்லாம்
ஒரே ஈரம்
கூரையின் ஓட்டைகளின் மூலம்
வீட்டினுள் பல
சூரியன்கள் முளைத்தன
அவற்றை
மிதித்த போதும்
பாதங்கள் சுடவில்லை
வீட்டின் கதவிற்கு
வெளியே ஒரே சிரிப்பு
கதவைத் திறந்தேன்
காலைப் பொழுது
களிப்புடன் என்னை
கட்டியணைத்துக்
கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனது நலம் எப்படி?

உனது ஊரின்
பனை மரங்கள்
பூப்பது இல்லை
காய்ப்பதில்லை
என்று
கறுப்பு மைப் பேனா
அழுதழுதே
எழுதியிருந்தது
ஏன்?

எனது மனம் அடிக்கடி
ஆசைப்படுகின்றது
உனது வீட்டிற்கு
முன்னால் உள்ள
நீலக்கடலின் எழும்
பெரிய அலைகளைப்
பார்ப்பதற்கு...

கீரிமலையின்
கடற்கரை ஓரங்களிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயும் நானும்
பதித்த
பாதத்தின் தடங்கள்
இன்னும் இருக்குமா...?
இறந்திருக்குமா...?

புதிதாகக் கட்டிய
உனது புதுவீடு
பூசாமலே
நாசமாகி விட்டதாக
எழுதியிருந்தாய்!

சிறுகச் சிறுக
சீமெந்துத் தொழிற்சாலையில்
கஷ்டப்பட்டுச்
சேமித்த பணம்
காணி வாங்கி வீடுகட்ட
வழிவகுத்ததாக
முன்பு எழுதியிருந்தாய்
ஏன் இப்போது
அந்த இடிந்த வீட்டையும்
அந்த நிலத்தையும்
விற்கப் போகின்றாய்..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அது ஏன்?

என் மூச்சுத் துவாரங்கள்
உன்
எண்ணங்களை
ஆக்ஸிஜனாய்
உறிஞ்சிக்கொண்டிருக்க
என்
இதயமோ - உன்
எண்ணங்களை
சுத்திகரித்து - என்
நரம்பு மண்டலத்தை
இயக்கிக் கொண்டிருக்க
நீயோ
கார்பன்டையாக்ஸைடாய்
ஏன்
வெளியேறிக்
கொண்டிருக்கின்றாய்...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியல் பொழுது!

சூரியமணவாட்டி
மேகத் தோழிகள்
புடைசூழ
வெட்கப்பட்டு
வான மண்டபத்தில்
வலது கால்
எடுத்து வைக்கிறாள்!

அந்தத் தங்கமேனிக்காரி
நித்திரைவிட்டெழுந்தால்
நிலத்துணி விரித்த
மஞ்சமெல்லாம்
மஞ்சளாய் மாறிவிடும்
மாயமென்ன?

வந்த பொன்னிற
மன்மதனின்
ஒற்றைக்கண்
பார்வைக்காக
பலகோடி பச்சைமரங்கள்
ஒற்றைக்காலில்
தவமிருக்கின்றன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவுக்கும்
புலர்வுக்கும் நடந்த
வர்க்கப் போராட்டத்தில்
வானகளத்தில்
இரவு வெடித்த
வேதனைக் கண்ணீர்
இங்கே வெள்ளியாய்
முளைத்ததா?

மேக ஆடையணிந்த
வானச் சுமங்கலி
ஆதவனை அள்ளி
ஆசையோடு
நெற்றிப் பொட்டிட்டுக்
கொள்ளும்
அழகான நேசம்
அந்திப் பொழுதில்
இரவை
கட்டியணைத்து
முத்தமிட்டு
விடைபெற்ற பகலுக்கு
சூரியக்குஞ்சை
பரிசளித்து
இங்கிதமாய்
விலகிக் கொள்கிறது
இரவு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராத்திரி ஏந்திய
கறுத்த பாத்திரத்தினுள்
அந்த
தங்க நாணயத்தை
பிச்சையிட்டது யார்?

கறுப்புப் புடவைக்காரியின்
ஆடையைக் காதலோடு
சூரிய சவய்க்காரத்தால்
மேகநுரை சிந்திட
மோகத்தோடு
சலவை செய்யும்
அந்த சகதர்மப்
பத்தினப் பிரியன்
யார்..?

கால நாடகத்தின்
அடுத்த கட்டம்
ஆரம்பம்
நீலத்திரையை
விலக்கிக்கொண்டு
ஆதவன் முகங்காட்ட
பொழுது விடியலாய்
எட்டிப் பார்க்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நிலை!

மரணித்துப்போன
இதயங்களுக்கு
எனது அஞ்சலை
அர்ப்பணம் செய்கின்றேன்
அஞ்சலியாக!

நொறுங்கிப்போன
இதயங்களின்
நோவுபோக்க
ஓர் ஒத்தடம்!
கார்கால
மேகங்களாய்
உலாவித்திரிந்த
களைப்புப் போக்க
உறங்குகின்றீர்களா...?

இன்றோ நாளையோ
நாங்களும் மரணத்தை
மடியில் ஏந்தியவண்ணம்
உங்களோடு
உறவு..... கொள்ள
காத்திருக்கின்றோம்!
கவலைப்படவேண்டாம்
இன்றைய இரவோடு
நாங்கள் இல்லாமல்
போனாலும் போவோம்...
பாவம்
மனிதநேயம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரியும் அகதிகள்!

குருவி சேர்த்த
குருமணல் மணியென
தேடிய பொருட்களும்
உருவி வடித்து
உதறிக்கட்டிய
எங்கள் வீடும்
அதோ....,
தொலைவில்
குதறிய பிணமாய்
அம்மா வழியிலும்
அப்பா உறவிலும்
கிடைத்த 'முதுசொம்'
மூன்று தலைமுறை
கண்ட பெட்டகம்
சிறிய மேசை
பெரிய கட்டில்
தம்பியும் நானும்
தூங்கிய தொட்டில்
இன்னும் பற்பல
பழைமையின்
சுவடுகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவநாகரீக
போக்குக்கேற்ற
புதுப்புதுக் கருவிகள்
யாவும் அதனுள்
வீடோ
இராவணன் கோட்டையாய்!

முற்றத்து மாமரமும்
மாதுளம் மரமும்
முருங்கை வேலியும்
கொல்லைத் தென்னையும்
எங்களைத் தேடும்!

பாவம் அம்மா
எதிரே
அம்பலத்தடியில்
இளமையில்
ஏறிச்சறுக்கிய
இருப்பிடப் பலகையோடு
எரிந்தே போனாள்
நாங்களோ...
எரியும் அகதியாய்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் + வீரம்!

எந்தக் கரையில்
நான் இருந்தாலும்
உன் மேல்
எவ்வளவு அக்கறை!

யுத்தங்கள்
ஓய்ந்துகொண்டே
செல்கின்றன.
ஆனால்
எமது காதல் யுத்தம்?

பதுங்கு குழிக்குள்
இருந்து
கருத்தரித்து
பிறக்கும் குழந்தை
வீரமாய் இருக்கும் என்று
நீ சொல்லிய
வீர வார்த்தைகள்
என் காதுகளின்
ஓரங்களில் - இன்னமும்
ஒட்டிக் கொண்டுதான்
இருக்கின்றன!

இராணுவ சிந்தனைகள்
மலிந்த
இந்தக் காலப் பகுதியில்
எனது சிந்தனைகள்
உனக்கு
தூசாகவே இருக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பாதங்களுக்குக் கீழே
ஓடிக்கொண்டிருக்கும்
சாக்கடை நீரை
எண்ணி
கசங்கிப் போகும் மனம்
பின்பு
உன் நினைவுகளோடு
குளிர்காய்வதை
சுகமாக எண்ணும்!

இரவிலும் பகலிலும்
இரைந்துகொண்டே
செல்லும் போர் விமானங்கள்
அறியாத
ஓர் இடத்தில்
கருத்தரித்து
பிறக்கும் குழந்தை
வீரமாக இருக்கும்
என்று
நீ சொல்லும்
வீர வார்த்தைகள்
எனது காதோரங்களில்
இன்னும்
ஒட்டிக் கொண்டுதான்
இருக்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செருப்பு!

வாங்கப்படும் வரை
'சோரூமில்'
கிடந்த நாங்கள்
வாழ்க்கைப் படும்போதே
கால்களில் போட்டு
மிதிக்கப்படுகின்றோம்!

உலக சமத்துவத்துக்கு
உதாரணங்கள் நாங்கள்
எங்களுக்குள்
பல தரங்கள்
இருந்தாலும்
அனைவரும் ஒன்றாக
தலைவாசலிலேயே
தங்கி வாழ்கின்றோம்!

நாங்கள்
காட்சியறையின்
கனிவுதேடி
கடித்துக் கடித்தே
பல்லுடைத்துக்
கொண்டவர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் அறிந்தும்
சிலரின் அடிவயிற்றில்
அடிப்பதில்லை
அறுந்தும் பலரை
வாழவே வைத்திருக்கின்றோம்!

மனிதனுக்கு மூளை
வேண்டுமென்பதற்காகவே
நாங்கள்
முதுகைக் கூட
சுட்டெரித்துக் கொள்கிறோம்!

மனிதனுக்கு
நாங்கள்
விசுவாச ஊழியர்கள்
மண்ணுக்கு
நாங்கள்
தன்மானப்
போராளிகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகி!

அழகின் உச்சம்
இறைவனில்லை
'நீதான்' என்று
நான் சொல்லுமுன்
என்
வாயைப் பொத்து!

சல்வாரின்
மடிப்புக்களை
இன்னும்
கூட்டிக்கொண்டு
ரோசாப் பூக்களோடு
குந்திக்கொள்!

அன்னநடை காணாத
விலங்கியல் மாணவர்களுக்கு
முன்னால்
ஒரு யார்தூரம்

நடந்து போ
தீராத நோயால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயரப்படுகிறவர்களுக்கு
உமிழ் நீரைத்தொட்டு
தடவி விடு!

திராட்சைத்தோட்டத்தில்
பூச்சி பிடிக்க வரும்
மஞ்சள் குருவிகளோடு
பறந்து திரி!

வண்டுகள் மொய்க்கும்
நந்தவனத்தில்
இதழ்களை
இறுக மூடிக்கொண்டு
நுழைத்துகொள்!

அழகின் உச்சம்
இறைவனில்லை
'நீதான்' என்று
நான் சொல்லுமுன்
என்
வாயைப் பொத்து!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவை மீட்டிப்பார்!

ஓலைக் குடிசையிலே
நீங்கள்
ஒன்பது பேர்
சுருண்டு படுத்த நாட்கள்...
காலைக் கடனுக்காய்
காலை விடிவதற்குள்
வைகறைப்பொழுதினிலே
'பனைவடலி'யை
தேடிச் சென்ற நாட்கள்....
மதிய உணவுக்காக
மல்லுப் பிடித்த நாட்கள்
எல்லாம் நினைவில் நிற்கிறதா?
இன்று
நீ வெளிநாட்டுப் பிரசை
அதனால் தானே - நீ
பெயரையே மாற்றிவிட்டாய்!

இன்று நீ இங்கு வந்து
சரியான 'கொட்' என்கிறாய்
வீடோ 'டேட்டி' என்கின்றாய்
வீட்டு உணவை வெறுக்கின்றாய்
'கிளைமேற்' மாற்றம் என்கிறாய்
இந்த 'கிளைமேற்றும'
இந்த நாடும்
உனக்கு நினைவிருக்கிறதா?
இது
நீ பிறந்த 'சொந்த மண்!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிவு விலகிச் செல்கிறது!

போரினால் பார் முழுதும்
இருண்டு கிடக்கிறது
இறந்து கிடக்கிறது!

பிரச்சினையென்னும்
பெருவெள்ளம்
தொடராது செல்ல
தடுத்து நிறுத்த
உலகத் தலைவர்கள் தான்
உறுதியான
அணையினை
அமைக்க முடியும்
வெள்ளத்தை
அடக்க முடியும்!
ஆனால் அவர்களே
அணையிடாது
ஆணையிருகிறார்களே...
பள்ளம் தோண்டி
பாரிற்கு பரப்பி விட
நமக்கு
விடிவென்பது
விலகிச் செல்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்தை மேம்படுத்த...

கத்தரியோடு வெண்டியும் சேர்த்து
தேட்டமிகு தோட்டம் நேர்த்தியாய்
நேய பல மரக்கறி வகைகள் வளர்த்து
தோட்டம் பல செய்திடலாம்!

வாழநல்ல வளமான வீட்டுடன்
வீட்டைச்சுற்றி தோட்டம் அமைத்து
சுற்றுப் புறத்தையும் சூழலையும்
சுத்தமாக நாம் வைத்திடலாம்!

வெங்காயம் மிளகாயுடன் சீரிய
இராசவள்ளியும் பயிரிட்டு
நாடளாவிய ரீதியில் நாம்
நன்மைகள் பல பெற்றிடலாம்!

வீட்டைச் சுற்றித் தோட்டம் போடுதல்
பொருளாதாரத்தை மேம்படுத்தும்
பச்சைப் பசேல் என பயிரைக்காண
மனமும் பசுமையாய் பூப்பூக்கும்!

கல்விகற்கும் மாணவர்கள் தோட்டத்தில்
ஓய்வுநேரத்தை செலவு செய்தால்
மனதிற்கு மெத்த நிறைவுடனே
பணத்தினையும் சேர்த்திடலாம்!

வீட்டில் தோட்டத்தை அமைத்திடுவோம்
விவசாயத்தையும் ஊக்குவிப்போம்
பொழுது போக்குடன் கூட
பொருளாதாரத்தை மேம்படுத்தும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம் வாழ்வின் முடிவல்ல!

எழுதவென்று எழுதுகோலைத் தேடுகின்றேன்
ஏனோ அதனைக் காணவில்லை
கடைசியாகக் கழற்றிப் போட்ட
எனது சேட்டைக் கண்டுபிடித்து
பொக்கெற்றுக்குள் கைவிரல்களை
நுழையவிட்டபோது...
எழுதுகோலுடன் கூடவே - ஒரு
இரங்கல் நோட்டீசும் எட்டுகிறது!

ஆம்!
முகைவெடித்து வெளிவந்து
மணம் பரப்ப இருந்த
ரோசா மொட்டொன்றை
கட்டாக்காலி மாடொன்று
கணப்பொழுதில் விழுங்கியது போல்
எருமை வாகனத்தில்
ஏறிவராக் காலன்கள்
எதிர்பாராத வேளையிலே
கவசவாகனத்தில் சென்று
சிறீஸ் கந்தராசாவின்
உயிரைப் பறித்த செய்தி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் சிந்தனைக் குதிரை
தெறிகெட்டுப் பறக்கின்றது!
ஓ...அவனையொட்டிய நினைவுகள்...
ஓ...அவனோடு பழகக் கிடைத்த
இனிமையான நாட்கள்...
தத்துவங்கள் நிறைந்த உரையாடல்கள்...
வாக்குவாதங்கள்...
நெடுநாட்களின் பின்பு
ஓர்நாள்
யாழ்பல்கலைக் கழகத்தையும்
யாழ் பல்தொழில் நுட்பக் கல்லூரியையும்
இணைக்கும் மண்ஒழுங்கையால்
தபால்பெட்டிச் சந்தியில் இருந்து
தொழில் நுட்பக் கல்லூரி நோக்கி
எனது கால்கள் விரைகின்றது!
பல்கலைக்கழக மாணவர் விடுதியான
பாலசிங்கம் மண்டபத்திலிருந்து
எதிர்கொண்டு வருகின்றான் சிறி
'உங்களையெல்லாம் இப்போது
முன்னர்போலக் காணக் கிடைப்பதில்லை'
அர்த்தம் நிறைந்த புன்னகை ஒன்றை
அதற்குப் பதிலாக உதிர்த்தவன்
'எம்முன்னே நீண்ட நெடும்பயணம்
நீண்டு விரிந்து கிடக்கிறது' என்கின்றான்!
பலபேர் கூடி பலவழிகளில் சென்றால்
நீண்ட நெடும் பயணத்தில்
சிறிது தூரத்தையாவது குறைக்கலாம் என்கிறேன்
நண்பா! அவதானமாகக் கேள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓடும் ஆறாக ஒரு வழி அமைத்தபின்
மேடு பள்ளங்களையும் வளைவு சுழிவுகளையும்
கண்டு மலைத்து நிற்பதில் அர்த்தமில்லை என்கிறான்.'
மாதம் இரண்டு பறந்தோடி இருக்காது
சிறியின் அகால மரணம் நண்பன் ஒருவன் மூலமாக
என் செவிக்கு எட்டுகிறது!
ஆம்!
இலட்சியவான் சிறிஸ்கந்த ராசாவின்
வீரமரணம்
விடுதலையில் ஒரு மைல்கல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைவாசி!

அரிசி, சர்க்கரை, சீனி
கோதுமை, எரிவாயு
பெட்ரோல், டீசல்
பேருந்து, ரெயில்
மின்சாரம், தண்ணீர்
எல்லாமே இன்று
விலையேறிப் போச்சு
நலிந்து கிடக்கும் மக்களை
மேலும் நசுக்கிச் சொல்ல
நாள்தோறும் ஒருவிலை
உயர்வாக வருகிறது!

'விலைவாசியைக் குறைப்போம்
மூன்றரை ரூபாய்க்குப்
பாண் தருவோம்...'
வேலைவாய்ப்பு அளிப்போம்'
என்று
தம்பட்டம் போட்டு
வாக்குறுதிகளை வீசியவர்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலைவாசியை வீழ்த்த வேண்டாம்
உயர்த்தாமலாவது இருங்கள்!

ஒன்று மட்டும் நிச்சயம்
கூடிய வயது குறைந்ததாக
வரலாறு இல்லை
ஏறிய விலைகள் மீண்டும்
இறங்கியதாக
இதுவரை சரித்திரமுமில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தரிக்கும் ஆன்மா!

சரித்திரத்தில் இடம்பிடித்துக் கொண்ட
கிளாலிக்கடல் ஏரியைத் தாண்ட
கடல்மேலால் நான் பறந்து போகையிலே
படகுகள் தண்ணீருக்குள் குவியாய்த் தெரிந்தது...!
இரவுப்படகில் செல்வதற்காக
தென்னஞ்சோலைக்குள்ளே
காத்திருந்த மக்கள் வெள்ளம்
புள்ளியாய்த் தெரிந்தனர்...!
கலங்கும் நிலம் புகுந்து
கொடிகாமம் சென்றங்கு
குற்றுயிரில் மண் கவ்வும் நிலை பார்த்து
சாவகச்சேரியின்று
சரித்திரத்தில் ஹீரோசிமா...!
பூவிழந்து பொட்டிழந்து
போன பெண்ணைக் கண்டுகொண்டு
'ஓ' வென்று கதறியழ
உடலத்தைத் துண்டாக்கி
கூவி அழுதவரைக்
கொன்று குவித்த இடம்
நாவற்குழியும் தாண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பைப் பறித்தெடுத்து
கன்னியரை மண் கிடங்கில்
சுற்றி எறிந்த இடம் இளைஞர் சவச்சாலை
சுற்றிவளைத்துச் சுடுகாடு கொண்டுவந்து
உற்றார் கதறியழ உயிரோடு தாட்ட இடம்
கண்ணீர் பெருக்கிவிட்டுக் கரத்தைக் குவித்தபடி
மண்ணிலே செம்மணியை
மனங்கசிந்தே முத்தமிட்டே
யாழ்ப்பாணத்தில்
ஆறாம் நாள் சமரினிலே
இந்திய சமாதானப் படையுடன்
நேருக்கு நேர் நின்று உக்கிரமாய்ப் போரிட்டு
'களத்தில்'
வீரச்சாவைத் தழுவிக் கொண்ட
அன்புநண்பன் 'சந்தோஸ்' இன்
செங்குருதி பாய்ந்தோடிய வீர நிலத்தைப் பார்த்து
விழிமலரை நனைத்துக் கொண்டே
உன்னுடைய பிறந்த மண்ணாம்
இளவாலைக்குப் போயிருந்தேன்!

மனித சஞ்சாரமே இல்லாத
மற்றொரு கிரகத்தைப் போல
ஊர் ஊமையாய்... ஊனமாய்...
களையிழந்து உயிர் அறுந்து தொங்கியது
ஓடுகளும் சீற்றுக்களும்
வேம்புமரக் கதவுகளும்
தேடிவைத்த ஜன்னல்களும்
தேக்க மரக்கதவுகளும் கழற்றப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றியுள்ள மதிலுமுடைந்து
பாழடைந்து போயிருந்த உன்றன்
'லூர்து புஸ்பவாசா' இல்லத்தைப் பார்த்தபோது
நொந்த புலம்பலினால் வெந்து வெடித்துவிட்டேன்
பாழடைந்து போயிருந்த உன்றன்
பழைய வீட்டுக் கூரை முகடுகளில்
அடைக்கலங்குருவியின் குடும்பங்கள் பல
அஞ்சாத நெஞ்சுடனே
அடையாள அட்டையின்றி
முட்டையிட்டுக் குஞ்சுபொரித்துக்
குடியிருக்கக் கண்டேனடி!

நீயும் - நானும்
தின்னவேலி பாமில் வாங்கி
ஆசையாய் நட்டு வைத்த செவ்வாழை மரமெல்லாம்
'ஷெல்' பட்டு அவலமாய் சிதறுண்டு கிடந்ததடி
செம்பாட்டு மண்போட்டு யூரியா உரம் போட்டு
அழகான பாத்தி கட்டி அன்பாக நீரூற்றி வளர்த்த
'சிவப்பு ரோஜா' செடிகளெல்லாம்
இதழ்விரித்துப் பூப்பெய்தமுதலே - ஒரு
கடைகெட்ட காமுகனால்
களங்கமாக்கப்பட்டாற் போல
சேதமாக்கப்பட்டு சீரழிந்து கிடந்ததடி!

நீ அண்ணன் வீட்டிலிருந்து
ஆசையாகக் கொண்டுவந்து
முற்றத்தில் நட்டுவைத்த செவ்விளநீர் மரம்
ஓலை எதுவுமின்றி வயிறு ஒட்டிய ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமாலியா சிறுவனைப் போல - அங்கு
சோகமாய் நிற்குதடி!

நாங்கள் ஆசையாய் ஒட்டகப்புலத்தில் வாங்கி
கிணற்றடியருகே நட்டு வைத்த
கறுத்தக்கொழும்பான் மாங்கன்றும்
கிளைகள் எதுவுமின்றி பரிதாபமாய்
பட்டமரமாகி நிற்குதடி!

பேரன் வல்வெட்டித்துறையில் இருந்து
கொண்டுவந்து நாட்டிய
தேன்பலாமரமும் கிளைகள் முறிந்து
கொப்பும் அறுபட்டாற் போல
வேரோடு சாய்ந்து போய்
பற்றையோடு பற்றையாக
தரையிலே கிடந்ததடி!

எங்கள் பெற்றோர் உற்றார் உறவினர்
ஊரார்... பழகிய பாசமுகங்களைத்தேடி
இளவாலைக் கிராமத்து மூலைமுடுக்கெல்லாம்
தெருத்தெருவாய் அலைந்து திரிந்தேனடி....
பொங்கிவரும் பால் போலப் பூத்துநிற்கும் நெற்கதிர்கள்
திங்கள் வந்து பார்த்தவுடன் சிரித்துத் தலையாட்டும்!

சித்திரமெழு வயல்வெளி பொட்டல்காடாகக் கிடக்குதடி
இறுதியில் பத்தாவத்தை
புனித பிலிப்புநேரியால் ஆலயவளவடியால்
நான் போகும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரும் இங்கு இல்லையென்றும்
தத்தமது பாதுகாப்புக் கருதி
எல்லோரும் 'அகதி'யாய்
ஓடிப்போய் விட்டார்களென்றும்
தெருநாய் ஒன்று தன் பாஷையில் சொல்லி
என்னையும் விடாது துரத்தியது!

மண்நிறத்தில் வெள்ளைப் புள்ளியும்
கண்ணிமைக்கு மேலே கறுப்புப் புள்ளியும் கொண்ட
அந்தத் தெருநாயைக் கண்டதும்
அது எங்கள் 'கிற்றி' என
அடையாளம் கண்டுகொண்டேன்!

'கிற்றி' குரைக்கவும் பெலன் இல்லாமல்
பழைய ஹீரோத்தனத்தை விடவும் முடியாமல்
சுவருடன் சாய்ந்து நின்று
என்னைப் பார்த்துக் குரைத்ததடி!

என்ன செய்வேன்...?
என்ன செய்வேன்...?
சின்னஞ்சிறுவனாய் நான்
அரைக்காற்சட்டையுடன்
துள்ளிப்பாய்ந்து திரிந்து
சிட்டுக்குருவியாய் நான்
சிறகடித்துப் பறந்து திரிந்த
என்னுயிர் மண்ணின் மீது
இன்று அந்நிய ஆதிக்கம்.
ஊர் மக்களோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்விழந்து, வரலாற்றுப் பெருமையுமிழந்து
சொந்த ஊரில் இல்லாது
இன்று 'அகதி'யென்ற அசலான பெயருடன்
வன்னியில், மடுவில், வவுனியாவில்
கொழும்பு - நீர்கொழும்பு - புத்தளத்தில்
புலம்பெயர்ந்து பலபேர்!

ஐரோப்பிய நாடுகளில்,
களைப்படைந்து மனமும் புண்பட்டு
மீண்டும்,
என் கல்லறைக்குத்
திரும்பிப்போன என்னிடம்
மற்ற சகோதரங்கள்
ஆசையாய்க் கேட்டார்கள்
'இளவாலை போனனீங்கள்
என்ன வாங்கி வந்தீர்கள்...?' என!

நான் அங்கு சென்று
ஒன்றுமே வாங்கவில்லை
ஆனால்
என் அந்தரிக்கும் ஆன்மாவைச்
சலவை செய்து வந்தேன் என்றேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயத்தில் ஓர் அஸ்தமனம்!

ஓ... என் இனிய செல்வியே
உன் நினைவுகள் எல்லாம்
சாட்சி இல்லாத கனாவைப்போல
பொய்யாகி விட்டது!

கடந்துபோன காலத்தின்
காதல் சுவடுகள் - என்
விழிகளில் கண்ணீரை வரவழைத்து
இதயத்தில்
சோககீதம் இசைக்கின்றது!

காத்திருந்தவன் பெண்டாட்டியை
நேற்று வந்தவன்
கொண்டுபோன கதைபோல
என் கதையும் ஆகிவிட்டது!

என் இனிய செல்வியே
வசந்தமாகிப் போய்விட்ட
காலத்தை நினைத்து
இந்த
இலையுதிர் காலத்திலே
சோகம் தழைக்கின்றது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே!
என்னால் பிரியமாக நேசிக்கப்பட்டவளே
என்னை விட்டுப்பிரிந்ததனால் தான்
நீ - பௌர்ணமியாய்
பிரகாசிப்பது உண்மையானால்
என்னைவிட மகிழ்வுறுவது
இவ்வுலகில் யாரும் இல்லை
ஆனால்;
என்னை வஞ்சித்துவிட்டுப் போனவளே
உன்னை நினைக்கும் தோறும்
என் இதயம் வேதனையால் துடிக்கின்றது!

விளக்கு வெளிச்சத்திலே
விட்டில் பூச்சியைப் போல
எங்கோ தொலைந்துவிட்ட
என் இதயம்
இருள் என்ற போர்வையாலே
என்னை இறுக மூடிக்கொண்டு
உனக்காக வாழ்த்தி இசைத்துவாழ
என்னைத் தயார்ப் படுத்திவிட்டது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாண்டிக்குளத்து அறிவிலிகள்!

கிளாலிப் பயணம் முடிந்து
ஆலங்கேணியில் இருந்து
பஸ் எடுத்து
பின்பு மூன்றரை மைல் நடைப்பயணம்
எல்லோருமே
யாழ் நகரிலிருந்து
கொழும்பு போகும் பயணிகள்!
நாங்கள் இளைஞர்கள் என்பதால்
தாண்டிக்குளத்தில் - அந்த
செக்கிங் பொயிண்டில்
கடுமையான பலத்த சோதனை
கூதற்குளிர் காற்றோடு
பனியும் கூடவே பெய்து
செக்கிங் பொயிண்டில் - இன்னும்
உடம்பை கூனிக்குறுக வைத்தது!

அடையாள அட்டையில் இருந்து
எல்லாவற்றையும் புரட்டிப் பார்த்த இராணுவத்தினர்
பலத்த தேடுதலின் பின்பு - எங்கள்
பயணப் பொதியினுள்ளே
துளாவிக் கண்டுபிடித்தவற்றை
ஒன்று சேர்த்தனர்!
மொத்தம் பத்தொன்பது...
நடமாடும் செய்தித் தொடர்பில்
செய்தி பறக்கின்றது
ஓடிவந்த ஒரு கும்பலிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தம் பத்தொன்பதையும்
ஒன்றாகப் பார்த்தவன் - சற்று
பின் வாங்கலாகச் சென்று கொண்டு - எங்கள்
நெஞ்சுக்கு நேரே மெஷின்கன்னைப் பிடித்தபடி
ஒக்கமலா என்ட என்கின்றான்
நாங்களோ அரை குறை சிங்களம்
ஆங்கிலம் தெரிந்தவங்கள்யாரும் - அந்த
இராணுவக் கும்பலில் இல்லை - பின்பு
ஒரு அரைகுறை ஆங்கிலம் தெரிந்தவனிடம்
எங்களை அழைத்துப் போகின்றார்கள்
எங்கள் அடையாள அட்டையிலிருந்து
அட்மிசன் காட்வரை நன்றாகப் பார்த்த
அந்த - ஆங்கிலம் தெரிந்தவன்
தனது சக சீருடையினருக்குச் சொல்கின்றான்
'இவ்வளவு பிரச்சினை வடக்கில் இருந்தும்
இன்னும் தமிழன் விடாமல் படிக்கின்றான்'
அடுத்த அரைமணி நேரத்தில்
எங்கள் விஞ்ஞான கல்குலேட்டர்கள்
எங்களிடம் ஒப்படைக்கப்படுகின்றது!

அறிவிலிகளின் செயற்பாட்டை
மனதினுள் இரசித்தபடியே
வவுனியாவில் பாஸ்க்யூவில் நின்று
பாஸ் எடுத்து அடுத்த நாள்
கொழும்பில் நடக்கும் லண்டன்
பரீட்சையில் பங்கு பற்றுவதற்காக
எங்கள் பயணம் தொடர்கின்றது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் கவிதை!

என் அன்புள்ள டாடி
நான் படித்த முதல் கவிதை நீங்கள்
என்னுடைய ஆரம்ப அறிவின்
அரிச்சுவடு நீங்கள்தான்
உங்களுடைய பல அனுபவங்கள்
எனக்குப் பள்ளிக்கூடத்தை விட - இலங்கை
தொழில் நுட்பக்கல்லூரியை விட
திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தை விட
லண்டன் பொறியியலாளர் நிறுவனத்தை விட (CEI)
அதிகமாக எனக்குப் போதித்தது!

உங்களுடைய குழந்தை மனம் இருக்கின்றதே
இன்று:
நான் ஒரு நல்ல குடும்பஸ்தன் ஆக இருப்பதற்கும்
என் அன்பு மனைவிக்கு
நான் ஒரு நல்ல கணவனாக இருப்பதற்கும்
எங்கள் அன்பு மகனுக்கு
நானும் ஒரு நல்ல டாடி ஆக இருப்பதற்கும்
மூல காரணம் நீங்கள் தான்!
அதற்கும் மேலாக;
நான் ஒரு கவிஞன் ஆனதற்கும்
நான் ஒரு எழுத்தாளன் ஆனதற்கும்
நான் ஒரு Shift Burner - Chemist ஆனதற்கும்
ஆதி காரணம்
நீங்களும் + மம்மியும் தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கவிஞனின் காதல் இலக்கியம்

என்
நெஞ்சத்து நாயகியே!
உந்தன்
நினைவுத் தோட்டத்தில் வந்து
நான் ஒரு கவிதை வடிப்பேன்!
உந்தன்
இதழ்களில் நானெழுதும்
இனிய சிறுகதை
என்
இதயத்தை உனக்குக் காட்டும்!
உந்தன்
இளநீர் மார்புத்தாளில்
என்
எழுதுகோலால் நான் எழுதும்
முழுநாவல்
என்
காதலின் உறுதியை உனக்குக் காட்டும்!
உந்தன்
மென்மையான வெண்ணிற மேனியில்
என் 'ஆண்'மை கொண்டு
நான் படைக்கும் நாவல் - உன் உள்ளே
காதல் இலக்கியம் வளர்க்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியவள்...

கன்னியவள் கட்டழகை
கண்டுவிட்ட காரணத்தால்
கன்னித்தமிழ் ஊற்றெடுக்கப்
பேனாவைப் பிடித்தவன் நான்!

தேனாக ஊறும் அவள்
சொல் அழகை இரசிப்பதற்கு
அடுத்தடுத்த பிறப்பினிலும்
அசல் தமிழ் மகனாய் பிறக்க வேண்டும்!

எந்தவொரு மொழிக்குமே
இல்லாத அழகு நடை
எங்களினிய தமிழ் மொழிக்கு
இருப்பதை நீவீர் காணீரோ--?

காலத்தின் மழையினில் நனையாமல்
வெயிலில் கருகிடாமல்
காற்றினில் கரைந்திடாமல்
உலகத்து மொழிகளோடு உட்கலந்துள்ள மொழி!

எத்தனையோ பிறப்பெடுத்தாலும்
செந்தமிழின் இனிமை கேட்க
அடுத்தடுத்த பிறப்பினிலும்
அசல் தமிழ் மகனாய் பிறக்க வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே? எங்கே? எங்கே?

கலியாண வீட்டின் மரியாதை காக்க
கனிவான மதுர ரசமே
அளவான ஆறுகுட நீர் எடுத்து
அதிவேகமாக உடனே
பழசான காடி ரசமாய் வடித்து
பரிவாய் அளித்த குமரா
இளவாலை செய்த தவத்தால் உதித்த
எழிலான மேரி பஸ்ரியன் எங்கே?

அரிதான பேறு இனிதாகப் பெற்று
அருளால் நிறைந்த குருவாய்
பெருவாரி மக்கள் உனையண்டிவந்து
பிதாவே துணை என்று அழைக்க
அருளாலே பொங்கி அனைவர்க்குமுதவிய
அடியானாய் வாழ்ந்த அமரா
குருமாரில் நல்ல திருவாக வாழ்ந்த
குருவே உன்பிரிவு இதுவோ?

வளமான எங்கள் இளவாலை பெற்ற
மகனே குருவாய் மலர்ந்து
யாழ் மேற்றாசனம் கண்ட குருவாக மிளிர்ந்து
எழில் பெற்று வந்து சிறந்து
பழவேத நாடு வங்காலை செய்த
பயனாக அங்கு பணிசெய்ய
தளமாகச் செய்து வாழ்வாங்கு வாழ்ந்து
தணலாகப் பிரிதல் முறையோ....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் ஆண்டு!

எங்கள் ஆண்டாம் இது
எல்லோரும்தான் சொல்கிறார்கள்
எங்களுக்காக
விழாக்கள் பல எடுக்கின்றார்களாம்;
பத்திரிகைகள்
எங்களுக்காக
ஒரு பக்கத்தையே ஒதுக்குகின்றனவாம்;
ஆனால்;
இருண்ட பெருங்காடுகளில்
இரவின் நடுங்கும் நீரோடையில்
நாங்கள் மேற்கொண்ட
பயணத்தில் எதுவித மாற்றங்களுமில்லை
'பூசா' முகாம்களிலும்
'அகதி' முகாம்களிலும்
இன்னும்
பல்வேறு வகைப்பட்ட சிறைக்கூடங்களிலுமிருந்து
வேதனைப்படும்
எங்கள் உடன்பிறப்புக்களின்
நொந்து நைந்துபோன
வேதனைக் குமுறல்கள்
இன்னமும் காற்றில் கேட்கின்றன!

வீட்டிற்கு ஒன்றாகப் புறப்பட்ட
நம்மவர்களும்
பிடித்துக்கொண்டு போகப்பட்ட
இன்னும் சிலரும் இல்லாமையால்
எங்கள் தாய்மார்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டி உலர்ந்துபோன
கன்னங்களில் வழியும் கண்ணீர்
இன்னமும்
நின்றபாடில்லை!

புகலிடம் தேடிப் புறப்பட்ட
நண்பர்கள் பலரின் கடிதங்கள்
இன்னமும் வந்தபாடில்லை!
யாருமற்ற தனிமையில்
நண்பர்கள் இல்லாத சோகத்தில்
நாங்கள் ஒன்றாகக் கூடிச் சந்திக்கும்
கோயிலடிமூலை இப்போது
புகைபடிந்த ஓவியம்போல் தெரிகின்றது!
எங்கள்
எதிர்காலக் கனவுகள் யாவும்
காற்றிலே கலந்து போய்விட்டன!

எங்கிருந்தோ ஒலிபெருக்கி அலறுவது
எந்தன் செவிப்பறையை அடைகிறது.
ஓம்! ஓம்!
'இந்த ஆண்டு
சர்வதேச இளைஞர் ஆண்டு'
ஆம்!
இந்தப் பல்லவியின் சரணங்கள்
இலங்கையில்
பரிதாபமாய் ஈனஸ்வரத்தில் கேட்கின்றன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகச் சின்னங்கள்!

நாங்கள்
விபச்சாரிகளாம்
விவஸ்தைகெட்டவர்களாம்
சமூகத்தின் - பாவச்
சின்னங்களாம்!

இன்னொருவன் இன்பத்திற்காக
எங்கள் வாழ்க்கையையே
உருக்கும் மெழுகுத்திரிகள் நாங்கள்!

எங்கள்
குடும்பங்களுக்காக
எங்கள் உடல்கள் மட்டுமா...
உள்ளங்களும் எரிகின்றன!

மற்றவர்களுக்காக
எங்களையே எரிக்கும்
நாங்கள் அல்லவோ
சமூகத்தின் தியாகச் சின்னங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச வீடமைப்பு ஆண்டு!

சர்வதேச வீடமைப்பு ஆண்டாம்
எல்லோரும்தான் புளுகுகின்றார்கள்
எல்லா அரசு கூட்டுஸ்தாபன
திணைக்களங்களின் முன்பாகவும்
அழகாக மூன்று மொழிகளிலும் எழுதி
அழகாக 'போட்டு' மாட்டியிருக்கிறார்கள்!
ஆனால்
ஹெலியாலும் பொம்பரினாலும்
சகடையிலும் சுப்பர் சொனிக் விமானங்களினாலும்
ஏன்... ஷெல்லாலும் வீடுகள்
திட்டமிட்டு தாக்கப்படும்
அனர்த்தங்கள் நின்றபாடில்லை!
இலங்கை அரசாங்கத்தின் எல்லா செய்தித்தொடர்பு
சாதனங்களின் உதவியாலும்
வீடமைப்பு ஆண்டுபற்றி
செய்திகள் 'புளுகு' ஆகி வருகின்றது
என்னதான் பம்மாத்தோ.....
கட்டிய வீடுகளை விட்டுவிட்டு
எங்கள் மக்கள்
பதுங்கு குழிகளைத் தேடி ஓடுவது
யாருக்கும் தெரிந்திருக்க
நியாயம் இல்லையே......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்!

மனிதநேயமென்ற
மானுடப்பண்பு
போர் எனுந்தீயால்
பொசுக்கப்பட்டு விட்டது!

சமாதானத்திற்கான
போரென்கின்றார்கள்...
நித்தமும்இங்கே
துப்பாக்கிகளும் ஷெல்லும்
வெடிப்பதனால்
சிதறிக்கொண்டிருக்கிறது
அமைதி!

போர் அரக்கனின்
கோரக்கரங்களில்
அமைதிதேவதை
அகப்பட்டுவிட்டாள்
ஆகையால்
இரத்த ஆறுகளே
எங்கும் ஓடுகின்றன!
வாழ்விழந்து
தாய் நாட்டுமக்கள்
தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள்!
இழப்பதற்கு இனி எதுவுமில்லை
மிஞ்சி நிற்பதென்னவோ
கண்ணீர் மட்டும்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சியம்!

என் இதயத்தில் நின்று
எழுகின்ற எனது நினைவுகளில்
எப்படி - நீ
உட்புகுந்து கொண்டாய்.....?

உன்னை சந்தித்துக் கொண்ட கொள்வதற்கு
முந்திய கணம்வரை
எந்தவொரு பெண்ணின்
முகத்தையும் என்மனம்
அடையாளம் வைக்கவில்லை!
அன்றொருநாள் - நீ
என்னை உன் இதமான
பார்வையினாலே
விழுங்கிக்கொண்டதை
என் விழிகள் தரிசித்துக் கொண்டன...
அதன் பின்னர்
எனக்கே தெரியாமல் என் மனம்
ஆகாயத்தில் சிறகடித்து
பறக்கத் தொடங்கியது...
இதயம் ஏனோ ஏங்கத் தொடங்கியது...
உன்னை - எனது
வாழ்க்கைத் துணைவியாக்க
இதயம் இலட்சியம் கொண்டது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வராதோ....?

இலுப்பை மரத்தடியில்
அதன் நிழலில் உட்கார்ந்து
பொழுது பல போக்கி
நாங்கள் விளையாடிய
காலம் மீண்டும் வராதோ...?

மூன்று கல்லை அடுப்பாக்கி
பத்தாவத்தை வாழ்மக்கள் கழித்துவிட்ட
பாத்திரங்களைப் பானை சட்டிகளாக்கி
மண்ணிலே சோறு ஆக்கி
அம்மா - அப்பா விளையாட்டு விளையாடிய
காலம் மீண்டும் வராதோ.....?

செல்வி நீ வயதுக்கு வந்து
பருவமடைந்து விட்டதனால்
என்னோடு சேர்ந்து இனிமேல் விளையாட
உனக்குத் தடைபோட்டதனால்
நீ இல்லாத துயரத்தில்
நான் மட்டுமல்ல - அந்த
இலுப்பை மரமே கருகுகின்றது!

செல்வி வயதுக்கு வந்துவிட்டாள்
பூப்படைந்து விட்டாள் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அறிந்த அந்தச் செய்தி
'டியூப்லைட்' எனக்கு
சிறுகச் சிறுகத்தான் விளங்குகின்றது!
நானும் நீயும் இனிமேல்
சேர்ந்து பழகக் கூடாதாம்
என்னைக் கண்டால் நீ
கதைப்பதற்கும் பல தடையாம்...
இதுவெல்லாம் எதற்கென்று
எனக்கேனோ விளங்கவில்லை?

நாங்கள் பஸ்விட்டும்
கார் ஓட்டியும் விளையாடிய
அன்னமுன்னா மரமும்
மஞ்சமுன்னா மரமும்
எந்தன் தனிமையினைப் பார்த்து
செல்வி எங்கே? என்று கேட்டு
சோக கீதம் இசைக்கின்றது!

என் இனிய செல்வியே...
முன்பு போல் நீயும் நானும்
இரவு காட்டுப் பள்ளத்திலிருந்து
ஐந்துகண் மதகு வரை
ஈச்சம்பழம் பிடுங்கவென்றும்
பொன்னந்தரவைக்கு
நுங்கு பொறுக்கவென்றும்
காற்றடித்தால் உச்சிவெயிலில்
காவோலையோடு பன்னாடை
பொறுக்கவென்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சணல் விதைத்து கதிரறுத்த கையோடு
பயறு விதைத்திருக்கும்
சித்திரமெழி வயல்வெளியில்
கள்ளப்பயறு பிடுங்கிக் காந்தலாம் என்றும்
காற்றடித்தால் - பேருது
அப்புவிடம் அறுத்த கள்ள நூலில்
தரவைக்குள் - சேந்தாங்குளம் குளம் கடற்கரையில்
பாம்பன் கொடி பறக்கவிட்டும்
நாங்கள் விளையாடிய
காலம் மீண்டும் வராதோ...?

தோயவார்ப்பு என்று சொன்னாற்போல
உன்னோடு பழகிய சினேகிதத்தில்
அந்த நீல அரைக்காற்சட்டையோடு
பூப்புப்புனித நீராட்டு விழாவுக்கு வந்தபோது
சரசரக்கும் காஞ்சிபுரச் சாறிகட்டி
நெற்றிப்பட்டம், உச்சிப்பட்டம் கட்டி
நகையாலே உன்னை அலங்கரித்த கோலம்
'டியூப்லைட்' என் மூளைக்கு
ஒன்றுமாக விளங்கவில்லை...
ஆனால் ஒன்றுமட்டும்...
காஞ்சிபுரச் சாறிசரசரக்க
ஒருகையால் சாறியைப் பிடித்தபடி
'தடதடக்க' நீ நடந்து வந்தபோது
என்னைவிடவும் உயரமாக
உண்மையில் நீ காட்சி தந்தாய்!
அன்று மட்டும்தான் உன்னை
சுதந்திரம் ஆகப் பார்க்க முடிந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பின்பு
நீ எங்குபோனாலும்
உன்னோடு பல துணைகள்
உந்தன் 'அம்மா' உட்பட...
ஆனால்
ஒன்றுமட்டும் என்னால்
சொல்ல முடிகின்றது
பாழாய்ப்போக
நீ ஏன் பூப்படைந்தாய்...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமைச்சல்கள்!

வரண்ட பாலைவனம்
அங்கு அந்த நாகமரம்
ஏக்கச் சூரியனால்
சருகான இலைகள்
ஆத்ம ஓரங்களில்
ஆதங்க வெளிச்சங்கள்
அந்தரங்க கீதங்களில்
முகாரியின் ஆலாபனை
மௌன பிரளயங்கள்
உதட்டுத் துடிப்பில்
உண்மைகள் உறங்கி விட
அவளது இமைக்கறுப்பிலே
இளமை தேங்கிவிட
நெஞ்சப் பாதையில்
இயலாமை வண்டி
கனவு உராய்வுகளால்
மன்மத தீப்பொறிகள்...
அவை
வெறும் பொறிகளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சிப்பூக்கள்!

புல்லே! பசிய எழிற் புல்லே!
உன்னைத் தான்; கேவலம்
ஆழமற்ற வேர்களையுடைய
அற்பப் புல் நீ... சந்தேகமில்லை!
ஆயினும் நீ ஓர் அதிசயம்
ஆயினும் நீ ஓர் அதிசயம்...
மிதிபட்டு மிதிபட்டு
வாழுகின்ற வாழ்வில்
மறுகணமே உன்னால்
நிமிர்ந்து நிற்க முடிகிறதெனில்
புல்லே! நீ ஓர் அதிசயம்
புல்லே! நீ ஓர் அதிசயம்...
சோகங்கள் துயரங்கள் கலக்கங்களால்
உன் நெஞ்சம் சரிந்திடவில்லை
உன் நம்பிக்கையை இழந்திடவுமில்லை!
பொறுமைக்கோர் இலக்கணமானாய்
அஞ்சி... அஞ்சி... அடிமைகளாய்
சுருண்டுகிடக்கும் நம்மக்கள்...
அவர்களின் ஆசான் நீயே
அவர்கள்
உன்னிடமிருந்து அறிய வேண்டியவை
பல....பல...பல...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் அது கனிந்திடும் அவ்வேளையில்
புல்லின் நுனிகளிலும்
புரட்சிகள் பூத்து வெடிக்கும்...
புல்லின் நுனிகளிலும்
புரட்சிகள் பூத்து வெடிக்கும்...!

*லண்டன் முரசு, களம், தொழில் நுட்ப இளைஞன் கோடுகளும் கோலங்களும் ஆகியவற்றில் வெளியான இக்கவிதை மீண்டும் மறுபிரசுரம் செய்யப்படுகின்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணுக்காக...

எங்கு பார்த்தாலும் சுவரொட்டிகள்
கண்ணீர் அஞ்சலிகள்
வீரமரணம் எய்தியபோராளிகளின்
பெரிய அளவிலான 'பானர்கள்'

வாழவேண்டிய வயதினில்
வாழவேண்டிய இளம் குருத்துக்கள்
தமிழினத்தின் துயர் துடைக்க
தம்மையே அர்ப்பணித்து
போராடவெனப் புறப்பட்டு
களத்தினில் வீரமணமெய்திய போராளிகள்!

அவர்களுடன் எம்மை ஒருகணம்
ஒப்பிட்டுப் பார்க்கின்றேன்
பந்தம் - பாசம் - குடும்பமெனும்
கோட்டினை விட்டு வெளியேற முடியாத
வெட்கம் கெட்ட சுயநலவாதிகள் நாங்கள்

ஆம்! ஓர் உண்மை நிரூபணமாகின்றது...
மண்வாசனையற்று கால்நூற்றாண்டை
கழிப்பதனைக் காட்டிலும்
மண்வாசனையோடு மக்களுக்காக
போராடி மடிவதே மேல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவுஸ்மேட் (தேடல்)

நாங்கள்
இல்லாமை என்னும்
வறுமைத் தலையணையில்
நித்திரை கொள்பவர்கள்!

நாங்கள்
இல்லாதவர்கள் என்பதனால் போலும்
எங்களின் விழிகளின் கண்ணீர் கூட
எம்மிடம் தங்காமல்
தலையணையில் தஞ்சமடைகின்றன!

திருமணம் என்ற
அழகான வாழ்க்கையில்
நாங்கள்
நுழைய முடியாதவாறு
சீதனப் பூட்டு
பெரும் தடை போடுகிறது
எனவே
பணப்புதையலைத் தேடி
'கவுஸ்மேட்' ஆக
நாங்கள் - 'மிடில்ஈஸ்ட்'.
சவூதி புறப்படுகின்றோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவிதி!

இரக்கமே இல்லாது
இரவு பகலாகப் பொழிகின்ற
இந்த மழைக்குத்
தெரியுமா...?
தென்னோலையால்
வேயப்பட்ட
என் வீட்டின் ஓலைக்குடிசை
கரைவது பற்றி...

தெரிந்து என்ன...
தெரியாவிட்டால் என்ன...
மழை கூரையை
நனைக்கவே செய்கிறது!

நனைக்கத்தான் மழை
நனையத்தான் வீட்டுக் கூரை
நனைந்து போவதுதான்
என் ஓலைக் குடிசையின்
தலைவிதி போலும்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவதை கண்ணீர் வடிக்கிறாள்!

மனித நேயம் என்ற
மனிதப் பண்பு
போர் என்ற
யுத்த அரக்கனால்
மரணித்து விட்டது!

சமாதானத்திற்கான
போர் என்ற போர்வையில்
நித்தமும் இங்கே
துப்பாக்கிகளும் ஷெல்லும் வெடிப்பதனால்
அமைதி என்ற ஒன்று
இல்லாது ஓடி ஒழிந்துவிட்டது!

அமைதிக்கான போர் என்ற போர்வையில்
துப்பாக்கி வெடிக்கின்ற
நேரம் எல்லாம்
சமாதானக் கொடி
சரிந்துகொண்டே பறக்கிறது!

சமாதான தேவதை
யுத்த அரக்கனின்
கோரப் பிடியில் அகப்பட்டு
தப்ப வழியின்றி
சாந்தி சமாதானத்துக்காய்
ஏங்கிக் கண்ணீர் வடிக்கின்றாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் (மம்மி)

அன்னையே அகிலம் தன்னில்
அன்பான தெய்வம் நீயே
ஈரைந்து மாதம் சுமந்து
எம்மையே நீ நொந்து பெற்றாய்!

கன்னித் தமிழ் பாடிக்
கனியமுதூட்டி - இந்த
நானிலம் போற்ற எம்மை
நல்லவர் ஆக்கி விட்டாய்!

கண்கண்ட தெய்வம் நீயே
காலடிப் பிடித்தோம் - எந்தாய்
மண்கண்ட தெய்வம் நீயே
மாண்புறும் எங்கள் பொன்தாய்!

விண்கண்ட தெய்வமாக
விளங்கிடு நின்கழலே
பண்பட்ட தெய்வமாக
பரிந்து நாம் கண்டோம் அம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ வேண்டும்!

ஆர்ப்பரிக்கும் மகிழ்ச்சியிலும்
அசையாத அமைதியிலும்
மிதமிஞ்சிய சந்தோஷத்திலும்
ஆழ்ந்த துக்கத்திலும்
இனம்புரியாத குழப்பத்திலும்
எனக்கு நீ வேண்டும்
நீ மட்டும் வேண்டும்!

பௌர்ணமி நிலவின்போதும்
மழையில் நனையும்போதும்
மண்வாசனை உணரும்போதும்
காலாற நடக்கும்போதும்
காற்றைச் சுவாசிக்கும்போதும்
எனக்கு நீ வேண்டும்
நீ மட்டும் வேண்டும்!

நான் நானாக இருக்க
என் சொந்த முகத்துடன் இருக்க
என் சொந்த முகத்தை பிரதிபலிக்க
என் பலவண்ண நினைவுகளிலும்
என் வண்ணக் கனவுகளிலும்
எனக்கு நீ வேண்டும்
நீ மட்டும் வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரும்பு நெஞ்சா?

இனியவளே...!
நீ மணம் முடித்துப்
போய்விட்டாய்
என் மனம் முறித்துப்
போட்டுவிட்டாய்!

அன்று
மார்கழி மாதக் கும்மிருட்டில்
உன் வீட்டில் யாருமில்லை
அன்று:
நீ என்னை இறுக அணைத்து
என் கன்னத்தில்
முத்தமிட்ட இடமெல்லாம்
இன்று
என் கண்ணீர்பட்டு
எரிகிறதடி!

என்னை
நிர்க்கதியாய் விட்டு
பரிதவிக்க விட்டுவிட்டு
மணம் முடித்துப் போனவளே...
உன் நெஞ்சமென்ன
இரும்பால் செய்யப்பட்டதா?
இல்லையேல்
உலோகத்தால் வார்க்கப்பட்டதா...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்போது விடியும்?

இன்றைய மாணவன்
இழந்த வசந்தங்களுக்காய்
நாளை ஏங்கப் போகின்றான்
என்பது சர்வ நிச்சயம்!
காரணம்;
இப்போது நடக்கின்ற
கல்வி வேள்வியில்
பலிகடாவே இவன்தானே!

இயற்கையோடு இசைவாக
கல்வியை மனனம் செய்வதில்
இவனது இளமைப் பருவத்தின் இனிய பகுதி
இருண்டே போகின்றது!
இரசிக்கப்பட வேண்டியதும்
உணரப்பட வேண்டியதும்
அலட்சியப்படுத்தப்படுகின்றன!

புத்தகத்துள் புதைந்த விழிகளினால்
பூமியை நோக்க முடியவில்லை
பூமியின் போக்கும் நோக்கவில்லை!
அவனது கைகளும் தம் துயர் துடைக்க
உயர்த்தக்கூட முடியவில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனால் என்ன செய்ய முடியும்...?
இவனைப் பெற்றவர்கள் - இவனுக்கு
உலகை அறிமுகப்படுத்துவதற்குமுன்
இவனுக்குப் புத்தகங்களை
அறிமுகப்படுத்தி விட்டார்கள்...
பின்விளைவுகளை நோக்கின்
இவனுக்கு இளமை கடந்த பின்புதான்
இதயம் ஒன்றிருப்பதாக
உணர்வேற்படுகின்றது!

பெயருக்குப் பின்னால்
பலபட்டங்களைப் பெற்றுக்கொண்ட
இவனால் என்னதான்
இப்போது செய்ய முடிகின்றது?
இந்தப் பட்டங்களைத் தவிர
இவனால் எதைத்தான் பெற முடிந்தது...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரம்ஜான் பெருநாள்!

உண்ணல் மறுத்து உபவாசம் ஈந்து
எண்ணரிய இடர்களை இதயம் ஏற்று
பண்ணிய நோன்பின் புண்ணிய பலனே
பார்புகழ் ரம்ஜான் பெருநாளே!

கண்ணை நிகர்த்த கல்விக் குர்ஆன்
காசினியில் வந்த திருமாதம் ரம்ஜான்
விண்ணும் மண்ணும் அடங்கும் ஓர்நூல்
வேதம் திருமறை திருக்குர்ஆன்!

அண்ணல் நபிகள் பெருமானார்க்கு
அருளாய் இறங்கிய தவமாதம்
உண்ணல் இன்றே மகிழ்ச்சி பொங்கும்
உயரிய ரம்ஜான் பெருநாளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் யார்?

நாங்கள் யார்?
எங்களின் வாழ்க்கை
விடிகின்றதென்று!
நாங்கள் கனவு காணுகின்றோம்
ஆனால்;
அன்றைய தினமே
எமக்கு விடிவதில்லை
மனிதமோ
சித்திரவதைக் கூடத்தில்
குற்றுயிராய் - பாவம்
யார் நாங்கள்?
எங்கள் குடியிருப்போ
இந்த நாடுதான் - ஆனால்
எங்கள் உயிர்
குடியிருப்பது மட்டும்
அடையாள அட்டையில்!

மனிதமோ
செக் பொயிண்டுகளில்
கூனிக்குறுகி
மிதிபட்டுக்கொண்டு - பாவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள்
வீதிகளிலும் விழிகளிலும்
இரத்த ஆறே தொடர்ந்து
ஓடிக் கொண்டிருக்கிறது!
பாவம் மனிதம்
பீரிட்டுப்பாயும் குருதியில்
அமிழ்ந்து கொண்டிருக்கிறது!

கொலை கொள்ளைகளும்
பாலியல் வல்லுறவுகளும்
எங்கள் வீட்டுக் கதவையே
தட்டுகின்றன!
மனிதமோ கண்ணீரில்
குளித்துக்கொண்டு - பாவம்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிய யுத்தம்!

யுத்தம் கொடூரமானது
யுத்தம் அதனூடு சம்பந்தப்பட்ட
போராளிகளை மட்டுமல்ல
அதனூடு சம்பந்தப்படாத
பொது மக்களையும் - அது
விழுங்கிவிடுகின்றது...

சிறுவன் செந்திலின்
கண்முன்னே இப்போதும்
யுத்தத்தின் பயங்கரம் தெரிகின்றது
தாழப்பறந்த ஹெலியின்
அறிவுறுத்தலின் படி
பொம்பரும், கீபீர்விமானமொன்றும்
பொழிந்துவிட்ட குண்டுமாரியில்
குரும்பையும், நொங்கும், சீக்காயுமாய்
மொட்டந்தலையாய்க் கருகிவிட்ட பனை மரங்களும்
இலக்குத்தவறி விழுந்ததாகச் சொல்லி
திட்டமிட்டு அழிக்கப்பட்ட
தமிழர் உடைமைகளும், வீடுகளும்
இந்துக் கோவில்களும்
கிறிஸ்தவ ஆலயங்களும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிசுகளும், பெரிசுகளாய்
கற்பிணிப் பெண்களுமாய்...
மரணித்துப் போய்விட்ட
எங்கள் தமிழ் மக்களும்
ம்...ம்....ம்...ம்...
இது சமாதானத்திற்கான யுத்தம்தான்
இந்தச் சமாதானத்திற்கான யுத்தம்
என்ற மாயைப் போர்வையை
வெளியுலகிற்குக் காட்டிக்கொண்டு
இன்னும் எத்தனை மனித உயிர்களைக் கொல்ல
கணக்குப் போட்டு வைத்திருப்பார்களோ....?
யுத்தம் கொடூரமானது...
யுத்தம் கொடூரமானது...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானம்

குளிர் படர்ந்து
கும்மென்று
இருள் படர்ந்த இரவுகளில்
முற்றத்தில்
கயிற்றுக் கட்டிலொன்றில்
மல்லாந்து படுக்கும்போது
நீல வானத்திலிருந்து
விண்மீன்கள் கண் சிமிட்டும்!
அவற்றிடையே
மூண்டிருக்கும் வெறுமையுள்
மனம் ஒடுங்கும்!

அசைவுகளேதுமற்று
அங்கே பரந்திருக்கும்
சூனியப் பெருவெளியின்
மயானத்து அமைதிகளில்
மௌனங்களில்
மனம் மூழ்கிவிடும்!
அடிவயிற்றிலிருந்து எழுமோர்
வெறுமையுணர்வில்
மனம்
வீம்பிழந்து செருக்கிழந்து
சுடலை ஞானம் ஓடிவரும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித அரக்கர்கள்!

அம்மை கண்ட மேனிபோல
யாழ் குடா நாட்டு வீடுகள் வீதிகள் எல்லாம்
ஷெல்லினதும் ஆர்டிலரியினதும்
துப்பாக்கியினதும் 'வெறித்தழும்புகள்'
எமனுக்குத் திருவிழா யாழ்ப்பாணத்து வானவெளியில்
பெரும் சத்தத்துடன் சீறிப்பாய்ந்து வரும் ஷெல்கள்
இரவைப் பகலாக்கியது!

யாழ்ப்பாணத்தின் 'நவாலி'
செயிண்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தின் மேல்
அடுத்தடுத்து விழுந்த எட்டு குண்டுகள்
பிறந்த குழந்தையை மட்டுமல்ல
தாயின் கருப்பையினுள் இருந்த
கருவைக் கூட சதைப் பிண்டமாக்கியது!

துயரங்களைச் சந்தித்த - சந்திக்கும்
யாழ்குடா நாட்டு மக்களின்
துயரங்களை - சோகக் கதைகளை
கேட்பதற்கு - அளப்பதற்கு
ஒரு துயரம் அளக்கும் கருவி இருந்தால்...
பிறந்த மனிதன்
இறக்கப்போவது உறுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் மனிதர்களைக் கொன்று பார்க்க
உங்களுக்கு டாங்குகள் தேவையா?
கேவலம்
பதினெட்டு கிலோ மீட்டரைப் பிடிக்க
எத்தனை போர் விமானங்கள்...?
எத்தனை பொம்பர்கள்....?
எத்தனை புக்காரக்கள்....?
எத்தனை டாங்குகள்....?
எத்தனை ஆர்டிலரிகள்...?
இத்தனைக்கும் மேலாக
ஐம்பதாயிரம் படைகள்...
உங்களுக்கு வெட்கமில்லையா...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமர் கோயில்!

இன்று இராமனுக்கு திடீர் யோகம்
இராம ஜென்ம பூமியைத் தேடிக் கண்டுபிடித்து
இராமனுக்கு கோயில் கட்ட விரும்புகின்றார்கள்

இராமனுக்கு கோயில் கட்டலாம் - அது
'அவர்களின்' சொந்த விருப்பம் - ஆனால்
ஆண்டாண்டு காலமாக இருந்த - அந்த
பாபர் மசூதிக்கு ஆபத்து செய்வானேன்....?

கல்லாகக் கிடந்த அகலிகையை
சாபவிமோசனம் செய்த இடத்தில்
கோயில் கட்டலாமே...
அப்போதாவது
நெஞ்சமெல்லாம் கல்லாகிக் கிடக்கும்
மனிதனின் நெஞ்சு நெகிழ்ந்து கொடுக்காதா...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிந்துணர்வு உடன்படிக்கை!

இந்து மகா சமுத்திரத்தின் இடையே
பாரதமாதாவின் பாதங்களை
முத்தமிட முயற்சித்துக் கொண்டிருக்கும்
எங்கள்
ஸ்ரீலங்கா மாதாவே
உமக்கு எமது நன்றிகள்!
முல்லையில் ஆடும் மயில்களும்
ஓடும் மான்களும்
குறிஞ்சியில் பாடும் குயில்களும்
பாயும் நதிகளும்
மருதத்தில் செழித்த வயல்களும்
கொழுத்த கயல்களும்
நெய்தலில் நெளியும் மீன்களும்
வருடும் தென்றலும்
நீ கொண்ட அருட்கொடையன்றோ!

மரகத மணிகளையும்
மாணிக்கப் பரல்களையும்
வெண்முத்துக்களையும்
கொத்துக் கொத்தாய்க்
கோர்த்தணிந்திருப்பவள் நீ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் தலை வடபுலத்திலும்
உன் முதுகு முன்
கிழக்குப்புலத்திலும் அமைந்து
மூளைக்கு வேலை தரமறந்த
முதுகு மூளைதனை
முறித்தெறிய முனைந்த
இதயத்தை இரும்பாக்கிய செயலை
இன்று நீ
புரிந்து கொண்டதற்காகவும்
இதயத்தை பாகாய்
உருக்கிக் கொண்டதற்காகவும்
எமது நன்றிகள்!

துப்பாக்கி தூக்கிய கரங்கள் - இன்று
இணைந்து கொள்ளவும்
மலங்க மலங்க விழித்த விழிகள்
மலர்ந்து துலங்கவும்
பாறைபோன்றிருந்த மனங்கள்
தேனாக வழியவும்
நீ
செய்துகொண்ட
புரிந்துணர்வு உடன்படிக்கைக்காக
உமக்கு
எமது நன்றிகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபு நாட்டு ஆசைகள்!

சித்திரைத் திங்கள் ஓர்நாள் சீரான குறட்டையோடு
நித்திரை கொண்டிருந்தேன் நிழலாடக் கண் விழித்தால்
அத்தான் என அழைத்து அருகினில் அமர்ந்து கொண்டு
ஆசையாய் சொன்ன செய்தி அரபுக்குச் செல்க வென்றோ!

பத்தினி சொல்லி விட்டால் மறு பதில் உள்ளதாமோ
பணத்தினைக் கடனாகப் பெற்று கொழும்பு புறப்பட்டேன் நான்
எத்தனை காலம் நாமும் ஏழையாய் இருப்பதிங்கே
எண்ணங்கள் கோட்டைகட்ட எய்திட்ட அம்பாய்ச் சேர்ந்தேன்!

பூசையில் பக்தனைப்போல் ஏஜெண்டின் முன்னால் நின்றேன்
பூக்கின்ற மலர்களைப்போல் புன்னகை புரிந்து கொண்டேன்
ஆசையாய் சொன்னார் தம்பி அரபுக்கு விரைவில் செல்ல
அளித்திடு முப்பதினாயிரம் ஆண்டவன் உந்தன் பக்கம்!

கல்ஃபுக்குச் சென்றால் போதும்
காசையா நானும் பார்ப்பேன்
மனைவியின் தாலியை ஈடு வைத்து
பணத்தையும் விட்டேன்!

ஆசையாய் அடுத்தவாரம் சென்றால்
அடுத்தநாள் வாரும் என்றான்
ஆறுமாதங்கள் அலைந்த பின்னே
அவனே விஷாவும் ரிக்கெற்றும் தந்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை நான் மன்னன் ஆக்கி
எழுப்பிய கோட்டைக்குள்ளே
எடுத்தடி வைத்தேன் ஆமாம்
ஏரோ பிளேனுக்குள்ளே!

அன்னையின் நாடு விட்டு
அன்னிய நாட்டுக்குள்ளே
ஆசையாய் காலை வைத்தேன்
ஆசைகள் கோடி கோடி!

விண்ணையே எனதாய் ஆக்கி விருப்பமாய்
வேலை செய்தேன்
விதிமுறைப்படி எனக்கு வீட்டுடன் சோறும் உண்டு
என்னவோ சொல்லிக் கொண்டு என்னெதிரே வந்த அரபி
ஏழையே உனக்கு சோறு இலவசம் இல்லை என்றான்!

சம்பளம் பாதியேதான் தருவதாய் சொல்லி மேலும்
சம்மதம் இல்லை என்றால் 'ஜல்லாபறா' போ நாடு என்றான்
ஆத்திரம் வந்ததாலும் அம்பலம் செய்த அந்த
அரபியை என்ன செய்ய
ஆகட்டும் 'சாதிக்' என்றேன் ஆண்டுகள் இரண்டின் பின்பு!

கம்பளம் இல்லாக் கோட்டை கனவினில் கனவான் நானும்
கல்ஃபுக்கு வந்த கடனை சரிவர அடைத்திடாமல்
என்பலம் இயன்ற மட்டும் ஏதேதோ சாமான் வாங்கி
சிறீலங்கா சென்று கட்டுநாயகா எயாப்போட்டில்
இறங்கிக் கொண்டேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுங்கத் துறையினரின் கொண்டாட்டமிக்க நேரம்
சூதாகப் பேசும் அந்த சுயநலக்காரர் முன்னே
பங்கமே செய்தவன்போல் பாவி நான் நின்று கொண்டேன்
பகலையும் இரவையும் பாராமல் பயணி தம்மை

தங்கச் சுரங்கம் என்றே தட்டிப்பறித்திடுவர்
'தா' என்ற பணத்தை நானும் கொடுத்தபின் அங்கிருந்து
பொங்கும் விழிகளுடன் புறப்பட்டேன் புத்தளம் நோக்கி
பொய்யான என்னைப் பார்த்து புலம்புவாள்
எந்தன் இல்லாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுடன் கலந்த கடற்புலிகள்!

திங்களே! வானக்கடலில்
    திறமுடன் நீந்தும் பெண்ணே!
மங்கிடும் இரவுப் பொழுதை
    மலர்ந்திடும் ஒளியே நிலவே!
கடற்புலிகள் நாங்கள் சொல்லும்
    கதையிதை நீ கேட்பாயா...?
பொங்கிடும் அன்பின் தன்மை
    புரிந்திடச் செவி சாய்ப்பாயா?

விடுதலைப்புலி என்றுலகம் சொல்லும்
    வீரவேங்கையாய் எம் தமிழ்மக்கள் கொள்வர்
சிங்களக் கடற்படையின் படகுகளை சிதற அடித்து
    சிங்கள கடற்படையை கலங்க அடித்து
எம் தாயக கடலோரியையும் - எம்மக்களையும்
    எம் கண் இமை போலக் காப்பதே எங்கள் இலட்சியம்
எம் தமிழ் மக்கள் எம்மைக் கடல் புலிகள் என்பார்கள்
    நிலாப்பெண்ணே நீ அறிவாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனுடன் தினைமா போல
திருவுடன் இன்பம் போல
வானுடன் நீலம் போல
வாக்குடன் தமிழ்மொழியைப்போல
கோனுடன் வீரம் போல
குருவுடன் ஞானம் போல
தலைவர் பிரபாகரனுடன் இணைந்திருந்து
கடற்புலிகள் ஆகினோமே...

எங்கள் தோட்டாக்கள் பறக்கும் பட்ட
அக்கணம் சிங்கள எதிரியின் உயிர் குடிக்கும்
எங்கள் படகுகள் சுழன்றோடுமென்றால்
காற்றுக்கும் பயம் பிடிக்கும்
எம் புகழ் வீரம் கேட்டு சிங்கள கடற்கடை நடுங்கும்
வம்புகள் நிறைந்த கிளாலிக்கடல்
எங்கள் படகுச் சத்தம் கேட்டுப்
பட பட பட வென்று அடங்கும்!

இருபதாம் நூற்றாண்டின் ஈடுஇணையற்ற தலைவன்
எங்களை நோக்கிச் சொன்ன
வார்த்தைகளை மனதினில் நினைக்கும்தோறும்
எம் இதயத்தில் ஒரு துணிவு பிறக்கும்
எதிரியைத் தேடிக் களத்தில் சந்திக்க மனம் துடிக்கும்
இணையற்ற தலைவர் பிரபாகரன்
எமக்கும் புனித நல் தோழன் என எண்ணும்போது
எம் இதயத்தில் பூக்கள் ஆடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயலை - வம்புகள் நிறைந்த கிளாலிக் கடலில்
கொய் மீன்கள் துள்ளிப்பாயும் ஆழ்கடலில்
சிங்களக் கடற்படையுடன் சுடும்சமர் புரிந்து இறுதியில்
அவர்களை சிதறடித்து நாமும் கிளாலிக்
கடலுடன் கலந்துட்டோமே!
இரவெல்லாம் வளரும் நிலவே
எம் வீரக்கதையை உனக்குச் சொன்னோம்
என்றாலும் எங்கள் தமிழ் மக்கள் நெஞ்சினில்
எங்கள் நினைவும் இயல்பாகப் பிறக்குமன்றோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழிக்கு ஒரு கடிதம்!

எப்படி இருக்கிறாய் தோழி..?
எப்போதுமே உன் ஞாபகமாக இருக்க
நீ கொடுத்த
சிவப்பு ரோசாச் செடிகள்
என் வீட்டில்
பூத்துக் குலுங்குகின்றன!

கண்ணியமான நட்பின்
அடையாளங்களே கவிதையாக...
கண்களால் அழகுசெய்த
உன்னை எப்படி மறந்திருப்பேன்?

பிறை நிலவாய் ஜொலிக்கும்
உன் சின்னச் சிரிப்பை இன்னமும்
நினைத்துக் கொள்வேன்
உன்னில் என்னில்.....
களங்கமில்லாத நட்பைத் தந்தது
அந்த சிரிப்புத்தானல்லவா!

மழைக்காலம் வந்தாலே உன்
ஞாபகம்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை நனையாமல்
வழியனுப்ப
உன் குடைதந்து நீ
நனைந்துபோன காட்சிகள்
இன்னமும் அழியாத ஓவியமாய்
என் நெஞ்சுக்குள் இருக்கிறது!

மனசுக்கு சுகமில்லாதபோது
நீ சொல்லிப்போன ஆறுதல்
வார்த்தைகளை
நினைத்துக் கொள்வேன்
அவையெல்லாம் தென்றலில்
கலந்த கவிதைகள் அல்லவா!

உன் உறவுகளின் மத்தியில்
என்னையும் ஓர் பந்தமாய்
அறிமுகப்படுத்தியது இன்னமும்
நெஞ்சைவிட்டு நீங்கவில்லை!

நான் தெரிந்துகொள்ள வேண்டும்
என்பதற்காகவே
எல்லா விஷயங்களையும்
இரகசியமின்றிப் பேசும் உன்
வெள்ளை மனசு.......
நம் நட்புக்கே
வரைவிலக்கணம் வகுத்த
நேர் கோடுகள்....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் பழகிப்பேசி இரசித்து
மகிழ்ந்த சிநேகிதமான
இனிமையான வசந்தகாலங்கள்
மீண்டும் திரும்புமா....?

நம் நட்பின் ஆயுளை அதிகமாக்க
பிரிந்தே இருப்போம்...
உன் அன்பை நினைத்தவாறே
மீண்டும் கேட்கின்றேன்
எப்படி இருக்கின்றாய் தோழி.....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானப் பூ மலரட்டும்!

பறந்துபோன சமாதானப் புறாக்கள்
சிறகடித்து எம்மை நோக்கி வந்து
இன்றோடு இரண்டு வருடம் ஆகிவிட்டது!

இறந்ததாய் நாம் நினைத்திருந்த உறவுகளோ
மறுதலித்து இல்லையில்லை
இருக்கின்றோமெனச் சொல்லியே எழுந்தன!

சமனற்ற சமாதானக் கோடுகள்
சமமாகிக் கொண்டதனால் - புரிந்துணர்வால்
சண்டைகளும் துப்பாக்கிகளும் சப்திப்பதை நிறுத்தின!

சந்தித்த கோடுகளின் முக்கோணங்கள்
தந்திட்ட நம்பிக்கையின் தருக்களோ
சமாதானம் - சமன்டி என்று கண்சிமிட்டி மிளிர்ந்தன!

நோர்வேயின் புத்தம் புதிய சொல்வெறயம்
என்ற புரிந்துணர்வுக் கொடியினினால்
இன உணர்வுகள் இனசந்தியின் மிளிர்ந்தன

எல்லோரும் இசைக்கின்ற சமாதானமென்ற கீதம்
புது மெருகுடன் எழுந்தது புரிந்துணர்வும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலிருந்து பிறந்தே மலர்ந்தது!
குடியிருந்த பேதங்கள் நீங்கி
குடிமக்கள் அனைவருமே இனமத பேதமின்றிக்
கைகுலுக்கிக் கொண்டனர்!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும்
புலிகளின் தலைவர் பிரபாகரனும் கைகுலுக்கிக்
கொண்டதனால்
பெரியதொரு பூசல் அகன்று சமாதானப்பூ பூத்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி!

ஓ.... என் பிரியமானவளே!
உன் பிரிவின் பின்பு நான் வருந்தியதுகூட
நீ கவர்ந்து சென்ற
இதயத்தை
திரும்பப் பெறமுடியாமல் தான்...

என் துயரங்களை
தூரே தூக்கி எறிய முடியாதபடி
நீ இன்னும் என் இதயத்தில்
புன்னகை பூத்தபடி
ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறாய்!

மரணம் வரை வேதனை தரக்கூடியதாக
என் இதயத்தை கொடூரமாகக் காயப்படுத்தியவளே!
பசுமையான எண்ணங்களோடு வாழ்ந்த
என் இதயத்திலே புகுந்து
அதில்
ரணங்களை ஏற்படுத்திவிட்டுச் சென்றவளே!


நான் வேதனையால் துடிப்பதுகூட
நீ ஏற்படுத்திய ரணங்கள்
என் இதயத்தில் - இன்றும்
மாறாத வடுக்களாக உள்ளதால்தான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் என் பிரியமானவளே!
உன் பிரிவுக்கு என்நன்றி!
ஏனெனில் - அன்று
நீ என்னை விட்டுப் பிரிந்திருக்காவிடின்
இன்று - நான்
கவிஞனாகவோ
எழுத்தாளனாகவோ
உருவாகியிருக்க முடியாதே....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்நூலாசிரியரைப் பற்றி...

செல்வக்குமார் என்னும் பெயரில் இலக்கிய உலகிலும் T. அன்ரன் என்னும் பெயரில் பரவலாகவும் அறிமுகமாகியுள்ள அன்ரன் செல்வக்குமார் 'செவ்வந்தி' காலாண்டு சஞ்சிகையில் வெளியாகிய புதிய பாடம் சிறுகதையின் மூலம் ( 25-6-1975 ) இலக்கிய உலகில் காலடி எடுத்து வைத்தவர். இதுவரையில் நானூறுக்கும் மேற்பட்ட கவிதைகளையும். பத்து ஆங்கில சிறுகதைகளையும் படைத்துள்ள இவர் இன்றைய தலைமுறையின் துடிப்புமிக்க கவிஞரும் எழுத்தாளருமாவார்.

இலங்கை சிமேந்துக் கூட்டு ஸ்தாபனத்தில் (புத்தளம்) Shift Burner-Chemist உத்தியோகஸ்தராகக் கடமையாற்றி, Saudi Cement Company, Eastern Province Cement Company, Raysut Cement Company, Oman என்பவற்றில் கடமையாற்றிய இவர் தற்போது Qater National Cement Company - யில் Central Control Room - ல் கடமையாற்றுகிறார்.

சிறந்த உதை பந்தாட்ட. ஹொக்கி வீரரான இவர் இலங்கைப் பாடசாலை உதை பந்தாட்ட தெரிவுக் கோஷ்டியிலும் இலங்கை இளைஞர் உதை பந்தாட்ட தெரிவுக் கோஷ்டியிலும் இலங்கை இளைஞர் ஹொக்கி கோஷ்டியிலும் அங்கம் வகித்த முன்னணி வீரர் என்பதும். இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

- பதிப்பகத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org